Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...




(C/706)

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 20 செவ்வாய்க்கிழமை (03.05.2011) பக்கங்கள் 12 ஓசை – 216

## ரொபேட் ஓ பிளேக் இலங்கை வருகை



(வாஷிங்டன்)

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் ரொபட் ஓ பிளேக் நேற்று ஈ.கே 652 எமிரேட்ஸ் விமானத்தின் மூலம் இலங்கை வந்தடைந்துள்ளார்.

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை வெளியாகி பெரும் பரபரப்புக்களை ஏற்படுத்தியிருக்கும் இந்தவேளை இவரின் வருகை பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் பல்வேறு அரசியல் தலைவர்களையும் அவர் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட வட,கிழக்குப் பகுதிகளுக்கு அவர் விஜயம் செய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## அனர்த்தப்பாதிப்பு; கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்படும் மக்களுக்கு வழங்கப்படுகின்ற நாளாந்தக் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது வழங்கப்படும் கொடுப்பனவு போதுமானதாக இல்லை என்பதால்,இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தனியார்துறை ஓய்வூதியம் மாற்றங்கள் வேண்டும்

### உயர் நீதிமன்றம் பரிந்துரை

(கொழும்பு)

இலங்கையில் தனியார் துறையினருக்காக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்படவுள்ள ஓய்வூதியத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்று உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

ஓய்வூதியத் திட்டம் தனியார்துறை ஊழியர்களுக்கு பாதகமாக அமையும் என்று குற்றஞ்சாட்டி, இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினால் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு விசாரணை நேற்றையதினம் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உயர் நீதிமன்றம் இந்தப் பணிப்புரையை வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்துக்கான சட்டத்தின் சரத்துக்களின்

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஒசாமா சுட்டுக்கொலை; அமெரிக்க படைகள் அதிரடி

(வாஷிங்டன்)

உலகை உலுக்கிய பல்வேறு தாக்குதல்களை நடத்திய அல்கொய்தா அமைப்பின் நிறுவுனர் ஓசாமாபில்லேடன் அமெரிக்கப்படைகள் நடாத்திய அதிரடித்தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டார். நேற்று அதிகாலை அதிரடியாக நடாத்தப்பட்ட கொமாண்டோத்தாக்குதலில் ஓசாமாபின்லேடன் கொல்லப்பட்ட செய்தி உலகம் முழுவதும் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க இராணுவத்தின், பயங்கரவாதத்திற்கு எதிரான படைப்பிரிவைச்சேர்ந்த அதிசிறப்புப்பெற்ற கொமாண்டோக்கள் நான்கு உலங்குவானூர்திகளில் நேற்று நள்ளிரவு கழிந்த பின்னர் தாக்குதல்களுக்காக புறப்பட்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)



## ஒசாமா என்ற மனிதன் யார்?



* பிறப்பு: 1957. சவுதி அரேபிய கட்டட நிர்மாணியின் மகன். குடும்பத்தில் 57 பிள்ளைகள்.அதில் ஒசாமா பின்லேடன் 17 ஆவது பிள்ளை. பதின்மூன்றாவது வயதில் அவர் தந்தையை இழந்தார். 17ஆவது வயதில் சிரியன்கெசினை மணந்தார்.
* 1979 - சோவியத் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு மற்றும் ஆப்கான் தலைவர்களை பாகிஸ்தானில் வைத்து சந்தித்தார். பின்னர் ஆப்கானுக்காக நிதித் திரட்டும் பொருட்டு சவூதி அரேபியாவுக்குச் சென்றார்.
* 1984 - தனது உல்லாச விடுதியை அமைத்து, (பாகிஸ்தான் எல்லை) அங்கிருந்து தன் கண்காணிப்புகளை ஆரம்பித்தார். ஆப்கானில் தனது முகாம்களை அமைத்தார். சூடானில் நிலை கொண்டிருந்தார். சிறிது காலத்தின் பின்னர் தனது இருப்பிடத்தை முழுமையாக ஆப்கானிஸ்தானுக்கு மாற்றிக்கொண்டார்.
* 1990-1991 அமெரிக்கா மீதான தனது எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தார். (வளைகுடா யுத்தத்தின்போது)
* 1994 சவூதி அரேபியா இவரது பிரஜாவுரிமையை பறித்துக் கொண்டது.
* 1996 இவர் பட்வா என்ற மதச்சார்பான அறிக்கையை விடுத்தார், அதில் அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்படவேண்டியவர்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.
* 1998 - கென்யா மற்றும் தன்சானியா நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மீது குண்டுத்தாக்குதல்.

அமெரிக்காவுக்கு எதிராக அணி திரளுமாறு இஸ்ரேல், சவூதி நாடுகளுக்கு அழைப்பு விடுத்தமையும் தனது தொடர்புகளை விஸ்தரித்துக்கொண்டார்.
* 2001 - அமெரிக்காவில் அமைந்துள்ள உலக வர்த்தக மையங்களின் மீது மனிதாபிமானத் தாக்குதல் - இதுவே மேற்குலக எதிர்ப்புக்கு பிரதான காரணமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## மகிழ்ச்சிக்கடலில் அமெரிக்கா



(வாஷிங்டன்)

அல் கொய்தா இயக்கத்தின் தலைவர் ஓசாமா பின்லேடன் அமெரிக்கப் படையிரால் கொல்லப்பட்ட சம்பவம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு அந்நாட்டு மக்களிடையே பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கப் படையிரால் ஓசாமா பின்லேடன் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து கேள்விப்பட்ட அமெரிக்கர்கள் வெள்ளை மாளிகையின் முன்பு கூடி பராக் ஒபாமா மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என கோசங்களை எழுப்பியுள்ளனர்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக பராக் ஒபாமா தெரிவு செய்யப்பட்ட போது அவருக்கு பெரும் செல்வாக்கு இருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)


## இலங்கையும், இந்தியாவும் வரவேற்பு

அல்கொய்தா அமைப்பின் நிறுவனர் ஓசாமா பின்லேடன் கொல்லப்பட்டது அல்கொய்தா மற்றும் பிறபயங்கரவாதக் குழுக்களுக்கு பெருத்த அடியாக அமையும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வரவேற்றுள்ளார்.

அப்பாவி மக்களைக் கொன்றுகுவித்து, மனித சமுதாயத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கிக் கொண்டிருக்கும் இது போன்ற பயங்கரவாதக் குழுக்களை ஒழித்துக்கட்ட சர்வதேச சமூகம், குறிப்பாக பாகிஸ்தான் தீவிரமாகச் செயல்பட வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)



## பாதுகாப்பை அதிகரித்தது அமெரிக்கா

(வாஷிங்டன்)

உலகம் முழுவதும் உள்ள அமெரிக்கத்தூதரகங்கள் மற்றும் அமெரிக்க நலன்பேணும் நிலையங்கள் அனைத்துக்குமுரிய பாதுகாப்பு பலமடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அல்கொய்தா அமைப்பின் தலைவர் பின்லேடன் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி ஏற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

# காணிப்பயன்பாட்டு வேலைத்திட்டங்கள் யாழ்.மாவட்டத்தில் துரிதமாகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காணிப் பயன்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளைத் துரித்தப்படுத்துவதற்கு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத் திறப்பு விழாவானது எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தினுள் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக தென்னக்கோன் பண்டாரா அவர்களினால் உத்தியோகபூர்வமாகத்திறந்துவைக்கப்படவுள்ளது. இவ் விழாவிற்கு காணி அமைச்சின் பிரதி அமைச்சர் சிறிபால கமல்நாத், காணி அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ், காணிப்பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி சாந்தி பெர்ணான்டோ, வடமாகாண காணி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர் மற்றும் காணி அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் இவ் விழாவில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இத்திணைக்களத்தின் கடமைகளை ஆற்றுவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் ஒவ்வொரு காணிப் பயன்பாட்டுத்திட்டமிடல் உத்தியோகத்தர்கள் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திணைக்களமானது காணி அமைச்சின் கீழ ஒருபிரிவாகச் செயற்பட்டு கடந்த வருடம் முதல் தனியானதொரு திணைக்களமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எங்கள் உறவுகள் எங்கே? கொழும்பில் விழிப்புணர்வுப் பேரணி

(கொழும்பு)

கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களிலிருந்து காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் குறித்த தகவல்களை அறிந்துகொள்ளும் நோக்குடன் நேற்று திங்கட்கிழமை விழிப்புணர்வுப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலை, பயங்கரவாத விசாரணைப் பிரிவு, இரகசியப் பொலிஸ் பிரிவு (நான்காம் மாடி) மற்றும் கடற்படைத் தலைமையகம் போன்றவற்றுக்கு விஜயம் செய்த இவர்கள் காணாமல் போனவர்களின் புகைப்படங்களை ஏந்தியவாறு இப் பேரணியை நடத்தியுள்ளனர்.

நாம் இலங்கையர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் பேரணியில் கலந்துகொண்ட மக்களுடன் இணைந்து சட்டத்தரணிகள் குழுவொன்றும் இந்த விஜயத்தில் கலந்துகொண்டது. காணாமல்போன தமது உறவுகளைத் தேடித்தருமாறும், அவர்களை கடத்திச் சென்றவர்களுக்கு உரிய தண்டனை வழங்குமாறுகோரியும் தமது உறவுகளை பறிகொடுத்த வடக்குக் கிழக்கு மக்கள் இப் பேரணியில் கோரிக்கை விடுத்துள்ளனர்.இப் பேரணியின்போது இலங்கையின் குற்றப்புலானாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளிடம் தமது தொலைந்துபோன உறவுகள் குறித்த தகவல்களை வழங்கியுள்ளனர்.



அத்துடன், இவர்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கையில் காணாமல் போனவர்கள் தொடர்பில் சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களும், ஊடகங்களும் பலதடவைகள் சுட்டிக்காட்டி வந்தபோதிலும், இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. வன்னியில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது படைத்தரப்பினரிடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்கள் பலரும் இவ்வாறு காணாமல் போயுள்ளனர.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


தபால் மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six month

தமிழ்மொழி மூலம்

20 வருட அனுபவம்

Dip. in psy chology - உளவியல் டிப்ளோமா
Dip. in office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Health & Hospital Management- சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

● கல்முனை ● கண்டி ● மன்னார் ● புத்தளம் ● யாழ்ப்பாணம் ● கொழும்பு
● வவுனியா ● மட்டக்களப்பு ● ஹட்டன் ● திருகோணமலை ● அனுராதபுரம்

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கை நெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக் கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 4848

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

Country Co-Ordinator
MARUTHUR -A-HASSEN
(B.sc. Psychology, M.sc.. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOE SUPERMARKET COMPLEX
MAIN STREET, SAINTHAMARUTHU - 07
Web: www. aiimas.com, www iimat.com, www aicomas. oyg
Tel: 067 222 2917, 067 367 1749, 067 367 9688, 071 803 4848



(C/699)

விண்ணப்ப முடிவு திகதி : 10-05-2011


# மண்ணித்தலை சிவன் கோயில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

(பூநகரி)

பூநகரி மண்ணித்தலைப் பிரதேசம் பற்றைகளால் மூடப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள புராதன சோழர்காலத்து சிவன் கோயிலை மீளப் புனரமைத்து மூலஸ்தானத்திற்கு கட்டடம் கட்டுவதற் குரிய நடவடிக்கையில் இந்து கலாசார திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பழமை வாய்ந்த இவ் ஆலயத்தை மீள அமைப்பதற்கு 4 இலட்சம் ரூபா நிதி முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் மூலஸ்தானத்திற்குரிய கட்டடத்திற்கான தூண்கள் போடப்பட்டு தற்போது புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன.

இவ் வேலைகளை மண்ணித்தலைக் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் பொறுப்பெடுத்து மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கல்லாறு கிராமத்திற்கு குடி தண்ணீர் வசதி

(முரசுமோட்டை)

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கிளிநொச்சி கல்லாறுக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

கல்லாறு பிரதேச செயலாளரின் ஏற்பாட்டில் சபையினால் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட கல்லாறுக் கிராமத்தில் சுமார் 240 குடும்பங்களைச் சேர்ந்த 650 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இம் மக்கள் தங்களுக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மக்கள் தங்களது குடிநீர் பிரச்சினையைப் பிரதேச செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து இச்சபையினால் பௌஸர்கள் மூலம் தற்போது இம்மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. (110)

# வன்னியில் சிறுபோகம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மும்முரமாகத் தமது வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்குளத்தின் கீழ் 10 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் கூடுதலான விவசாயிகள் இச்செய்கையினையே மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் 80 வீதமான நிலப்பரப்புக்களில் இச்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. அத்துடன் மருதநகர், பன்னங்கண்டி, முரசு மோட்டை போன்ற பகுதிகளில் 30 வீதமான நிலப்பரப்புக்களில் விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏனைய நிலங்களும் விவசாயிகளால் துரிதகதியில் பண்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்தகாலங்களைவிட இம்முறை அதிகளவான விவசாயிகள் இச்செய்கையில் அக்கறை செலுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)

# உலக உணவுத்திட்டம் மீளாய்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து உலக உணவுத்திட்ட அதிகாரிகள் குழு ஒன்று எதிர்வரும் 12ஆம் திகதி யாழ்.செயலகத்தில் யாழ்.அரச அதிபர் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துத் தமது நடவடிக்கைகள் குறித்து மீளாய்வு செய்யவுள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

உலக உணவுத்திட்டம் யாழ்.மாவட்டத்தில் வேலைக்கான உணவு, மாணவர் மதிய உணவு மற்றும் கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மாருக்கான சோளம், சோயா மா விநியோகம் போன்ற நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

2011ஆம் ஆண்டிற்கான தமது இவ்வாறான திட்டங்கள் குறித்து மீளாய்வு செய்யவும் பயிற்சிப்பட்டறை ஒன்றை நடாத்தவும் இக்குழுவினர் இங்கு விஜயம் செய்கின்றனர்.

ஏற்கனவே இக்குழுவினர் எதிர்வரும் 5ஆம் திகதி விஜயம் செய்ய இருந்ததாகவும் அதுவே 12ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா)

# தொடரும் மீள் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி ராமாவில் நலன்புரி நிலையத்தில் இருந்து ஒரு தொகுதி மக்கள் முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய் கருநாட்டங்கேணிப் பகுதிக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 28 பேரே இவ்வாறு யாழ். தென்மராட்சி ராமாவில் நலன்புரி நிலையத்தில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிகாரிகளினால் பொறுப்பேற்கப்பட்டு, முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய் கருநாட்டங்கேணிப்பகுதியில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை கடந்த புதன் கிழமையும் செட்டிகுளம் நலன்புரி நிலையத்தில் இருந்து 16 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

பேசாமல் இருப்பவன் ஊமை, எப்போதும் பேசிக் கொண்டிருப்பவன் வாயாடி, பேசவேண்டிய இடத்தில் மட்டும் பேசுபவன் அறிவாளி. -நிக்கல்சனி-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வேண்டாம் இரட்டை வேடம்

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாகவும், ஐ.நா.செயலாளரினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி வெளியாகியதையடுத்து, அந்த அறிக்கைக்குப் பல்வேறு தரப்பினரதும் கருத்துக்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

ஐ.நா.செயலாளர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய நிபுணர்குழு, ஒரு தலைப்பட்சமாக அறிக்கை ஒன்றைத் தயாரித்து வழங்கியுள்ளதாக இலங்கை அரசு குற்றம் சாட்டி வருவதுமல்லாமல், அதனை இறைமையுள்ள இலங்கை மக்கள் ஒன்று திரண்டு எதிர்க்கிறார்கள் என்ற தனது பலத்தையும் வெளியுலகிற்கு காட்டி வருகிறது.

இந்த அறிக்கை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது வழமையான பாணியில் கருத்துக் களையும், அறிக்கைகளையும் வெளியிட்டு வருகிறார்கள்.

தமிழ்மக்களின் ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் செயற்பட்டு வரும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகள், நிபுணர் குழுவின் அறிக்கையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஒட்டுமொத்த தமிழ்மக்களின் நிம்மதியான வாழ்வில் மண்ணை வாரித்தூவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அதனைத் தடுத்து நிறுத்த எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது, வெளிநாடுகளில் தஞ்சமடைந்து உல்லாச வாழ்க்கை வாழ்ந்த கூட்டமைப்பினர் ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் பறக்கத் தயாராகி வருவதாகவும் தெரியவருகிறது.

ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளான ரஷ்யாவும், சீனாவும் தங்களது 'வீட்டோ' அதிகாரத்தைப் பாவித்து இலங்கையைக் காப்பாற்றிவிடும் என்ற நிலையில், இலங்கைத் தமிழ்மக்களின் நிலையை விளக்குவதற்கு மாவை சேனாதிராசா செல்லப்போகிறாராம்.

மாற்றுக் கட்சி உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் தலைவர்கள், தமிழ்ப் புத்திஜீவிகள் ஏனைய அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் எனப் பலரையும் புலிகள் சுட்டுக் கொன்றபோது, அவர்களது மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக எந்தவொரு உலகநாட்டிலாவது புகார் செய்திருந்தாரா? அதனை அப்போது செய்திருந்தால் நிலைமை இப்பொழுது வேறுவிதமாக மாறியிருக்கும்.

இந்த நிலையில், தமிழகத்தில் செல்வாக்கு இழந்து நிற்கும் தலைமைகளினதும், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களினது ஆதரவைப் பெறவும் இந்தியாவின் ஆசியையும் பெறப்போகிறார்களாம்.

எப்படி இருக்கிறது கூட்டமைப்பினரின் அரசியல் சடுகுடு ஆட்டம்! இந்த ஆட்டத்தில் வெல்லப்போகிறவர்கள் யார்? என்று காலம்தான் பதில்சொல்ல வேண்டும்.

தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினை தொடர்பில் அரசுடனான ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தைகளையும் முடித்துக் கொண்ட இவர்கள், எதிர்வரும் 12ஆம் திகதி ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கும் தயாராகி வருகிறார்கள்.

அரசுடனான பேச்சுவார்த்தைகளில் காலத்தைக் கடத்தி வரும் கூட்டமைப்பினர் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த தமது தீர்வுப்பொதியை இன்றுவரை அரசிடம் சமர்ப்பிக்கவில்லை.

இந்தநிலையில், தமிழ்மக்களின் கவனத்தை வேறு திசைகளில் திருப்புவதற்கு சீனாவுக்கும், ரஷ்யாவுக்கும் சென்று தமிழ்மக்களின் நிலை குறித்து விளக்கமளிக்கப் போகிறார்களாம். அங்கு இவர்களுக்கு ஏதோ தேவை இருப்பது போல் சந்தேகிக்கத் தோன்றுகிறது.

இலங்கை விவகாரங்களில் சர்வதேச சமூகம் தேவையற்ற தலையீடுகளில் ஈடுபடவேண்டாம் என்று சீனா எச்சரித்திருப்பதுடன், இலங்கைப் பிரச்சினையை குழப்பும் வகையிலான எச்செயற்பாடுகளுக்கும் அனுமதி அளிக்கக்கூடாது என்றும்,

ஐ.நா.வின் எந்தவொரு சபையிலும் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வரப்பட்டாலும், அதற்கு எதிராக ரஷ்யா தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பாவிக்கும் என்று அந்நாடு அழுத்தம் திருத்தமாக கூறியபின்னும், மாவை சேனாதிராசா தெரிவித்திருக்கும் கருத்தின் மூலம் தமிழ்மக்களை ஏமாளிகளாக ஆக்கப் பார்க்கிறார் போலும்.

யுத்தத்தில் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர், தந்தை செல்வாவின் நாமத்தை அடிக்கடி உச்சரித்து அவர் காட்டிய போராட்டப் பாதையை நினைவுபடுத்தி, தமது அரசியல் இருப்பைத் தக்கவைக்க முயலும் தமிழரசுக் கட்சியினரின் இரட்டை வேடம் அம்பலமாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை. - ஆசிரியர்.

# ஓமந்தை மகா வித்தியாலயத்தை படையினர் அதிபரிடம் கையளித்தனர்

(வவுனியா)

கடந்த இரண்டு ஆண்டு காலம் பாதுகாப்புப் படையினரின் பாவனையில் இருந்த ஓமந்தை மகா வித்தியாலயம் நேற்றுத் திங்கட்கிழமை காலை இராணுவத்தினரால் வவுனியா வடக்கு கல்வித் திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது என மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் முதலில் ஓமந்தையில் தங்கவைக்கப்பட்ட பின்னர்தான் நிவாரணக் கிராமங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

2009ஆம் ஆண்டு மே மாதம் ஓமந்தை மகா வித்தியாலயம் இராணுவத்தினரின் பாவனையில் இருந்து வந்தது. நேற்று நடைபெற்ற கையளிப்பு வைபவத்தில் ஓமந்தை பிரிவுக்குப் பொறுப்பான பிரிகேடியர், பிரதிப் பொலிஸ் மா அதிபர், மாவட்ட அரச அதிபர், வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், ஆசிரியாகள், கிராம சேவையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இராணுவத்தினர் தமது பாவனையில் வைத்திருந்த பொது மக்களுடைய வீடுகள், அரச கட்டடங்கள் மற்றும் நிலங்களைப் படிப்படியாக விடுவித்து வருவதுடன், இடம்பெயர்ந்த மக்களுடைய மீள்குடியேற்றத்திற்கும் உதவியளித்து வருகின்றனர். (12,39)

# முகமாலை, இத்தாவில் கிராம மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கவும்

## பிரதேச மக்கள் ஒன்றியத் தலைவர் கோரிக்கை

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் பல வருடங்களாக மீள்குடியேற்றம் செய்யப்படாமல் தினமும் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் ஒன்றியத் தலைவர் செல்லையா மார்க்கண்டு தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட முகமாலை, இத்தாவில், கிளாலி ஆகிய பரதேச மக்கள் தற்போது முகாமகளிலும் உறவினர்கள், நண்பர்களது வீடுகளிலும் வாழ்ந்து வருவதாகவும், இவர்களது மீளக்குடியேற்றம் தொடர்பாக எவரும் அக்கறை கொள்ளாத நிலையில் தமது வாழ்க்கை நிலையை யாரிடம் கூறுவது என்று தெரியாமல் வாழ்வாதார நிலையில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த பிரதேசங்கள் யுத்த காலத்தின்போது முன்னரங்கப் பிரதேசங்களாகக் காணப்பட்டதால் இங்கு அதிகளவில் கண்ணி வெடிகள் காணப்படுகிறது. இக் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீளக்குடியேற்றம் செய்வது எப்போது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதைவிட இம்மக்களின் மீளக்குடியேற்றம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்தியபோதும் இதுவரை அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத தெரிவித்த அவர், இது தொடர்பாக அரச அதிகாரிகள் கவனம எடுத்து இம்மக்களை மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (29)

# புனரமைக்கப்படாத சந்தைகளில் வியாபார நடவடிக்கைகள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முரசுமோட்டைப் பகுதியிலுள்ள பிரதான சந்தைகள் புனரமைக்கப்படாது சேதமடைந்த நிலையிலேயே காணப்படுவதால், மழை காலங்களில் வியாபார நடவடிக்கைகள் சிரமத்தின் மத்தியிலேயே மேற்கொள்ளப்படுவதாக வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் இச்சந்தைப் பகுதிகளில் வியாபாரிகள் சிறு குடிசைகளை அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட, இச்சந்தைப் பகுதியில் காணப்படும் பழைய கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டால் தாம் இலகுவாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதைவிட, இச்சந்தைப் பகுதிகளில் பாதுகாப்பான வேலிகள் இல்லாமையால் கட்டாக்காலி கால்நடைகள் சந்தைக்குள் வந்து அசௌகரியங்களை ஏற்படுத்துவதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து சந்தைப் பகுதிகளிலுள்ள கட்டடங்களை ஓரளவு புனரமைத்துப் பாதுகாப்பான வேலியை அமைத்துத் தருமாறும் வியாபாரிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (40)

## சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் 2 ஆம் மொழியாக சிங்களத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல 4.30 மணி வரை புலோலி மெ.மி.த.க. பாட சாலையில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஒரு ஆசிரியர் தவறாது இக்கருத்தரங்கில் பங்குபற்றுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (109)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நவாலி சின்னப்பா வீதியைப் புனரமைப்புச் செய்வது தொடர்பான பொது மக்களின் பங்களிப்பு பற்றிய கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நவாலி கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து மக்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மானிப்பாய் கிராம உப அலுவலகப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

## பூநகரியில் சேதமடைந்த சைவ ஆலயங்களின் புனரமைப்புக்கு 46 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(பூநகரி)

கடந்த காலத்தில் ஏற்பட்ட போர் நடவடிக்கையினால் முற்றாகவும், பகுதியளவிலும் சேதமடைந்த பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சைவ ஆலயங்களைப் புனரமைப்புச் செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் இந்து கலாசாரத் திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொண்ட 23 இந்து ஆலயங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபா வீதம் 46 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுத் தற்போது அந்நிதி வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாலயப் புனரமைப்பு வேலைகளை 2 மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதாக அவ்அவ்வாலய நிர்வாக சபையினரும் அவ்வூர் கிராம முன்னேற்றச் சங்கங்களும் இணைந்து ஒப்பந்தம் ஒன்றைச் செய்து, இதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட செயலகத் திட்டமிடல் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (112)

## தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தினால் வருடா வருடம் யூன் மாதம் நடத்தப்பட்டு வரும் திருவள்ளுவர் விழாவினை முன்னிட்டு கிளிநொச்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் கண்டாவளை கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான நாவன்மைப் போட்டி இன்று முருகானந்தா மகாவித்தியாலயத்திலும், கரைச்சி கோட்ட மட்டப் பாடசாலை மாணவர்களுக்கான நாவன்மைப் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

மாவட்டத்திற்கான இறுதி நிலைப் போட்டிகள் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் மாணவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை அறிவித்துள்ளார். (112)

# கழிவுநீர் தேக்கம்; தொற்றுநோய் அபாயம் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை


(முரசுமோட்டை)

கண்டாவளை முரசுமோட்டை 2 ஆவது யூனிற் பகுதியில் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் கழிவுநீர் தேங்கிக் காணப்படுவதுடன் வீட்டுக் கழிவுப்பொருட்களும் கொட்டப்பட்டு வருவதால் பல்வேறு தொற்றுநோய்கள் ஏற்படக்கூடிய அபாயநிலை காணப்படு வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் கடந்த பல நாட்களாகக் கழிவுநீர் தேங்கிக் காணப்படுவதாகவும் குறிப்பிட்ட சிலர் மீன்கழிவுகளையும் வீட்டுக்கழிவுப் பொருட்களையும் இந்த நீர்தேக்கங்க ளில் கொட்டி வருவதாகவும் இதனை அண்டிய பகுதியில் வாழ்கின்ற குடும்பங்கள் தமக்கு இதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிககின்றனர்.

இதேவேளை, இது தொடர்பாக அப்பகுதி கிராம அலுவலர் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அப்பகுதியைச் சுத்தமாக்கி சூழலை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட யோகாசனக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அகில இலங்கை கலை இலக்கிய சங்கத் தலைவர் பொன். சுகந்தன் கண்காட்சியில் வெற்றி பெற்ற ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார்.

## மூன்றுநாட்கள் நடைபெற்ற வடமாகாண இளைஞர் முகாம்

(வவுனியா)

வடமாகாண ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 500 இளைஞர், யுவதிகள் பங்கு கொள்ளும் வடமாகாண இளைஞர் முகாம் கடந்த புதன் கிழமை மாலை வைபவரீதியாக ஆரம்பமாகி மூன்று தினங்கள் வவுனியா பூந்தோட்டம் தேசிய கல்வியியற்கல்லூரியில் நடைபெற்றது.

இளைஞ்ர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய தேசிய இளைஞர்சேவைகள் மன்ற வடமாகாண காரியாலயத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது.

வடமாகாணப்பணிப்பாளர் திருமதி எஸ்.விமலேஸ்வரி தலைமையில் ஆரம்பமான முதல் நாள் நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ் சாள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ் ணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு. மன்னார் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் கழக உறுப்பினர்கள் இளைஞர் முகாமில் பங்கு கொண்டதுடன் சிரமதானம், சமய பிரார்த்தனை, தலைமைத்துவப் பயிற்சி, விளையாட்டு உள்ளிட்ட பல நிகழ்வுகள் நடைபெற்றன.(39)

## ஒன்றுகூடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இறுதி ஆண்டு மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரியின் தமிழ் விரிவுரையாளர் க.தர்மராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அத்துடன் அயற் பாடசாலை மாணவப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டதுடன் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றது. (11)

## முன்பள்ளி சிறார்களுக்கு பசுப்பால்

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இயங்குகின்ற 41 முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆயிரத்து 418 பிள்ளைகளுக்கு சத்துணவுத்திட்டத்தின் கீழ் ஒருகப் பசுப்பால் வழங்கப்பட்டு வருகின்றது.

மார்ச் மாதம் தொடக்கம் காலை இந்தப் பசுப்பால் வழங்கப்பட்டுவருவதாகவும் கூட்டுறவுச் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருவதாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு, திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது. (112)

## விபத்துக்கு வழிவகுக்கும் வகையில் நாவலர் வீதியின் அவலநிலை

(கொக்குவில்)

யாழ் - நாவலர் வீதி போக்குவரவுக்கு உகந்ததாக இல்லாமல் மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது.

குறிப்பாக கே.கே.எஸ் வீதிக்கும், கஸ்தூரியார் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் பாரிய குழிகள் தோன்றிக் கிடக்கின்றன.

இதனால் இப்பகுதியில் செல்லும் வாகனங்கள் சர்க்கஸ்சில் ஈடுபடுவது போன்றே பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது.

மேலும் வாகன நெரிசல் காணப்படும் நேரங்களில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாக நேர்வதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ்வீதியைக் கவனத்தில் கொண்டு, கூடிய விரைவில் செப்பனிடவேண்டுமென சகல தரப்பினரும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.(68)

## நடமாடும் மருத்துவசேவை

(முல்லைத்தீவு)

ஹெல்ப் ஏச் சிறிலங்கா (Help Age SriLanka) வின் நடமாடும் மருத்துவ சேவைக் குழுவினால் அண்மையில் கோரக் கன்கட்டுக் கிராமத்தில் மருத்துவ சேவை ஒன்று வழங்கப்பட்டது.

இம் மருத்துவசேவையில் அக்கிராமத்திலுள்ள 50 வயதுக்கு மேற்பட்டவர்ளுக்கான கண் பரிசோதனை மற்றும் ஏனைய நோய்கள் தொடர்பாகப் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (40)

## வடகடல் வலைத்தொழிற்சாலைக்கு இந்தியா 153 மில்லியன் கடன் உதவி

(கொக்குவில்)

குருநகரில் அமைந்துள்ள வடகடல் நிறுவனத்தின் வலைத்தொழிற்சாலைக்கு இந்திய அரசு வழங்க முன்வந்த 153 மில்லியன் ரூபாவும் கடன் அடிப்படையிலே வழங்கப்பட உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த யுத்தகால அனர்த்தங்களில் வடகடல் நிறுவனத்தின் வலைத் தொழிற்சாலை பாரிய சேதமடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவே மேற்படி கடனுதவியை வழங்க இந்திய அரசு முன்வந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (68)

## சங்கக்கிளைகளில் மண்ணெண்ணெய் இல்லை

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கடந்த இரண்டு வாரங்களாக மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விளக்கு எரிப்பதற்கு மண்ணெண்ணெயைப் பெறுவோர் வெகுதூரம் நடந்து சென்று தனியார் கடைகளில் மண்ணெண்ணையைக் கூடுதல் விலைக்கு பெறுவதாகத் தெரிவிக்கப படுகின்றது. (70)

# குடும்ப வன்முறை

**மத்தியஸ்தம் மற்றும் மத்தியஸ்தப் பயிற்சி நிலைய அனுசரணையில் மத்தியஸ்தப் பயிற்சிப் பயிற்றுவிப்பாளர் சட்டத்தரணி மு.திருநாவுக்கரசினால் தொகுக்கப்பட்ட குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் (2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கம்) இங்கு பிரசுரமாகிறது.**

*13) இடைக்கால கட்டளையைப் பிறப்பிப்பதற்கான அவசர தேவை இல்லையென நீதிமன்றம் தீர்மானிக்குமாயின் அந்த இடைக்காலக் கட்டளையை வழங்காமல் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அணுகுமுறைகள் யாவை?*

◆விண்ணப்பம் செய்த நாளிலிருந்து 14 நாட்களுக்குள் விசாரணைக்கான தினத்தை நியமித்தல்

◆பிரதிவாதிகளுக்கு எதிராகப் பாதுகாப்புக் கட்டளையை ஏன் பிறப்பிக்கக் கூடாது என்பதற்கான காரணங்களை விசாரணையின் போது சமர்ப்பிக்கும்படி பிரதிவாதிகளைக் கேட்க வேண்டும்.

*14) இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளையைப் பிறப்பித்ததையடுத்து அல்லது பிறப்பிக்காததையடுத்து நீதிமன்றம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் யாவை?*

◆ பாதுகாப்புக் கட்டளையை வழங்குவது பற்றியும் தீர்மானம் எடுப்பதற்கான விசாரணையை நீதிமன்றம் செய்யும்.

◆ விசாரணைக்கான நியமிக்கப்பட்ட திகதி பற்றி பிரதிவாதிகளுக்கு அழைப்புக் கட்டளை சேர்க்கப்பட்டுள்ளதென நீதிமன்றம் திருப்தியடையுமாயின், பிரதிவாதி விசாரணைக்கான நியமிக்கப்பட்ட திகதியில் நீதிமன்றத்துக்கு சமூகமளிக்கத் தவறினால் பிரதிவாதி இல்லாமல் விண்ணப்பத்தைப் பரிசீலனைக்கு எடுத்து, அவ்விடயம் பற்றிய பாதுகாப்புக் கட்டளையை பிறப்பிக்க நீதிமன்றம் தீர்மானிக்கும்.

◆விசாரணைக்கான திகதியன்று பிரதிவாதி நீதிமன்றத திற்குச் சமூக மளிப்பாராயின் விண்ணப்பம் தொடர்பாக நீதிமன்றம் விசாரணை நடத்தும்.

*15) விசாரணையின் முடிவில் நீதிமன்றம் செய்வதென்ன?*

குடும்ப வன்முறையை தடுத்து நிறுத்தும் அவசியம் இருப்பதாகவும், பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டி பாதுகாப்புக் கட்டளையைப் பிறப்பிக்க வேண்டுமெனவும், நீதிமன்றம் திருப்தியடையுமாயின் பாதுகாப்புக் கட்டளையைப் பிறப்பிக்கும்.

அதன் பின்னர்

◆நிரந்தரக் கட்டளையைப் பிறப்பித்து

◆கட்டளையின் பிரதி, பிரதிவாதியும் பாதிக்கப்பட்டவரும் வசிக்கும் பொலிஸ் நிலையத்தின் அல்லது நிலையங்களின் பொறுப்பாளருக்கு சேர்ப்பிக்கப் பட வேண்டும்.

*16) விசாரணையின் போது நீதிமன்றத்தினால் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் சாட்சியங்கள் எவை?*

இடைக்காலக் கட்டளையை வழங்குவது பற்றி பரிசீலிக்கும் போது, வழங்கப்பட்ட சாட்சியங்களையும் மற்றும் அவசியமான சத்தியக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அவற்றையும், வாய்மூல சாட்சியங்களையும் நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்.

*17) விசாரணையின் போது பிரதிவாதி நேரடியாகப் பாதிக்கப்பட்டவரை விசாரிக்க வேண்டி இருக்குமா?*

◆பிரதிவாதியின் சார்பில் சட்டத்தரணியொருவர் ஆஜராகுவாராயின் அவரினூடாகவே பாதிக்கப்பட்டவரை விசாரிக்க முடியும் (குறுக்கு விசாரணை)

◆பிரதிவாதியின் சார்பில் சட்டத்தரணியொருவர் ஆஜராகாத போது பிரதிவாதி நேரடியாக கேள்விகளை பாதிக்கப்பட்டவரிடமோ, சாட்சிகளிடமோ கேட்பதை நீதிமன்றம் தடுக்கலாம்.

அவ்வாறான சூழ்நிலையில் பிரதிவாதி அவரது கேள்விகளை நீதிவானிடம் சமர்ப்பிக்க,நீ அவற்றை நீதிவான் பாதிக்கப்பட்டவரிடமோ சாட்சிகளிடமோ கேட்கலாம்.

*18) இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளையின் இயல்பு எத்தகையது?*

◆ பிரதிவாதி குடும்ப வன்முறை புரிவதை அல்லது புரிவதற்குத் திட்டமிடுவதைத் தடுப்பதாகும்.

◆ மேலும் சாட்சியங்களைப் பெற்ற பிறகு ஏனைய தடைகளை விதிப்பது பற்றி சுருக்கமாகக் கூறலாம்

◆ பாதிக்கப்பட்டவருக்கு எதிராகப் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்படக்கூடிய வன்முறைகளிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்கான அவசரமான தேவையை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளுமிடத்து நீதிமன்றத்தினால் விரைவாகப் பெற்றுக் கொடுக்கக் கூடிய நிவாரணமும் இடைக்காலப் பாதுகாப்பும்

◆ பிரதிவாதியின் விளக்கங்களைப் பெறாமல் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால கட்டளையையும் வலிதுடையதாக இருக்கும் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணையை அடுத்து, பாதுகாப்புக் கட்டளையைப் பிறபபிப்பது அவசியமற்றதென்ற தீர்மானத்தை நீதிமன்றம் எடுக்குமாயின் இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளையை இரத்துச் செய்யும்.

தொடரும்......

# முதலாளித்துவத்தின் கைக்கூலிகளாக தொழிலாளர் சங்கம் இயங்கி வருகிறது

## முன்னாள் ஆசிரிய சங்க உபதலைவர் ஆதங்கம்

(குருநகர்)

1956 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு இலங்கையில் தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவத்தின் கைக்கூலிகளாக இயங்கத் தொடங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு யாழ். முதலாம் குறுக்கு வீதி 33 ஆம் இலக்கக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலாளர் ஒத்துழைப்புக் குழுவின் ஐக்கிய மேதினக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் முன்னாள் ஆசிரியர் சங்க உபதலைவர் சா.தியாக லிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது -


இற்றைக்கு 125 வருடங்களுக்கு முன்பாக 1886 ஆம் ஆண்டு தொழிலாளர், தம்மை ஒரு வர்க்கமாக வரித்து 8 மணி நேர வேலையை வலியுறுத்தி சிக்காகோ நகரச் சதுக்கத்தில் ஒன்றுகூடிப் போராடி வென்றெடுத்த நாளை அடையாளப்படுத்தியே மேதினம் உலகமெங்கும் முன் வைக்கப்பட்டு வருகிறது.

1947 -1953 ஆம் ஆண்டு வருடங்களில் இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடியாக விளங்கிய பாட்டாளி வர்க்க எழுச்சி இன்றைய நாளில் உலகளாவிய மட்டில் முதலாளித்துவத்தின் எழுச்சியால் தொழிலாள வர்கக எழுச்சி பின்னடைந்து போவதையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது எனத் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற வங்கி ஊழியர் எஸ்.சிவபாலன் (சிற்பி) உரையாற்றுகையில் -

தொழிலாளர்கள் உரிமையை இழந்துள்ள நிலையிலேயே இந்த 125 ஆவது மேதின நாளை நினைவுகூருகிறோம். சகலமும் உலக மயமாக்கப்பட்டுள்ள நிலையில் தொழிலாளர்களின் எழுச்சி, மேதினக் கொண்டாட்டம் என்பன கலாவதி ஆகின்ற ஒரு முறைமையே தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே உழைப்பாளர்களைத் தகவல் தொழில்நுட்ப ரீதியாகப் புதிய வடிவங்களில் சுரண்டப்படுகின்ற கைங்கரியம் நடைபெற்று வருகிறது. இதனால் தொழிலாள வர்க்கம் திசை திருப்பப்பட்டு தன்னிலை இழந்து போகின்ற அபாயம் தோன்றி வருவதைக் காண்கிறோம் என்றார்.



கவிஞர் எஸ்.ஜி.கணேசவேல், வ.சுதந்திரராஜா, கீத பொன்கலன் மற்றும் வடகடல் தொழிற்சாலை ஜெகதீஸ்வரன், ஆசிரியர் சங்கப் பிரதிநிதி கென்ரன்றோய், இ.இராமச்சந்திரா ஆகியோரும் உரையாற்றினர். (68)




யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் முன் வீதியில் நேற்று மாலை படையினரால் அமைக்கப்பட்டிருந்த வீதித்தடை கேற்றின் மீது தட்டிவான் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை மீறி மோதி விபத்துக்குள்ளாகி இருப்பதைக் காணலாம். (படம்: தமிழ்வாணன்)

# வெதுப்பகங்களை பதிவு செய்தல் தொடர்பான கலந்துரையாடல்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வெதுப்பக உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 50 இற்கு மேற்பட்ட வெதுப்பக உரிமையாளர்கள் உள்ளனர். இந்நிலையில் இதுவரை வெதுபபக உரிமையாளர் சங்கம் மீளமைப்புச் செய்யப்படாத நிலையில் அவற்றை மீளமைப்புச் செய்வது தொடர்பாகவும் மாவட்டச் செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டு தங்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பாகவும் இதில் கலந்தாலோசிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டு சுகாதார நடவடிக்கைகள் சம்பந்தமான விடயங்கள் பற்றியும் கலந்துரையாடினர். (110)

# மீன்பிடித் தொழிலுக்கு உதவும் வகையில் முட்கம்பி வேலிகள் அகற்றப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணை வீதியில் மண்டைதீவு சந்திப்பகுதியில் கடற்பரப்பினுள் படையினரால் அமைக்கப்பட்டிருந்த தொடர் முட்கம்பி வேலிகள் படையினரால் அங்கிருந்து அகற்றப்பட்டு, அப்பகுதிகளில் கடற்தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைக்குப் படையினரால் வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

யுத்த காலத்தின்போது இப்பகுதிகளில் கடல் நீரேரிப்பகுதியை உள்ளடக்கி மண்டைதீவுச் சந்தியை மையமாக வைத்துப் படையினரால் மினி முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அம் முகாமின் கடற்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த முட்கம்பி வேலிகள் படையினரால் அகற்றப்பட்டு இப்பகுதிகளில் கடற்தொழிலாளர்களின் கடற்தொழில் நடவடிக்கைக்கு வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிந்தது. (பா)

# சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

(கரணவாய்)

கரணவாய்ப் பகுதிகளில் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரைப் பொதுமக்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினர் எமக்குத் தெரியப்படுத்தினால், அவாகளுக்கு எதிராகத் தாம் நடவடிக்கை எடுப்பதாக கரணவாய் குஞ்சர் கடை இராணுவ முகாம் பொறுபபதிகாரி தெரிவித்துள்ளார்.

கரணவாய்ப் பகுதியில் அடிக்கடி இடம்பெறும் சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக குஞ்சர் கடை இராணுவப் பொறுப்பதிகாரிக்கும் வர்த்தக சங்க உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின்போது வர்த்தக சங்கத்தினர் தெரிவித்ததாவது -

நெல்லியடி மத்திய பகுதியில் மலசல கூடமொன்று அமைக்கப்படவேண்டும். அத்துடன் மின்சார வசதிகள் இல்லாத சில பகுதிகளுக்கு மின்சார வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும், நெல்லியடி மத்திய பஸ்நிலையப் பகுதியில் மதுபோதையில் நடமாடும் நபர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும், பழைய சந்தைப் பகுதியில் உள்ள, புனரமைப்பு செய்யப்படாத மலசலகூடங்களைப் புனரமைப்புச் செய்து அவை மக்களின் பாவனைக்குப் பயன்படுத்த விடப்படவேண்டும் என்றும்,

கரவெட்டி தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் வயல் வெளிகளில் கலாசார சீரழிவான நடவடிக்கையில் ஈடுபடுவோரை இனங்கண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும்,

நெல்லியடி மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பாக முறைப்பாட்டுப் பெட்டி ஒன்று வைக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் இராணுவ பொறுப்பதிகாரியிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இது தொடர்பாக இராணுவப் பொறுப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் -சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரை உடனடியாகத் தமக்குத் தெரியப்படுத்துமாறு அறிவித்ததுடன், தொலைபேசி இலக்கங்களையும் வர்த்தக சங்கத்தினரிடம் வழங்கினார். அததுடன் அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் வர்த்தக சங்கத்தினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (18)

# தென் இந்திய சித்திரக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய தூதராலயம், கொழும்பு இந்திய கலாசார மையத்துடன் இணைந்து தென்னிந்திய சித்திரக் கண்காட்சி ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

'புதுச்சேரி புளு' எனப் பெயரிடப்பட்டுள்ள இக் கண்காட்சியானது எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கண்காட்சியானது 6, 7, 8 ஆகிய தினங்களில் காலை 10.00 மணி முதல் 5.30 மணி வரை மக்கள் பார்வைக்காகத் திறந்திருக்கும் என யாழ். இந்திய துணைத் தூதராலய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(03.05.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

சித்திரை 20 ஆம் நாள்.

இராகுகாலம் 2.5G–4.2G, சுபநேரம் 10.2G –11.5G,

நட்சத்திரம் பரணி பி.இ.4.52 வரை,

திதி: அமாவாசை பி.ப.1.01 வரை

சித்தம், சித்திரைப் பரணி.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பண வரவு, மன நிம்மதி, அதிர்ஷ்டம், காரிய சித்தி.

**ரிஷபம்:–** வீண் அலைச்சல், பண வரவு, பொருட் செலவு, மன நிம்மதி.

**மிதுனம் :–** மனக் குழப்பம், வீணான பயம், காரிய ஜெயம், பண வரவு.

**கடகம்:–** மன நிம்மதி, காரிய சித்தி, திருடர் பயம், வீண் அலைச்சல்.

**சிம்மம்:–** பண வரவு, அதிர்ஷ்டம், காரிய சித்தி, மன நிம்மதி.

**கன்னி :–** வீண் அலைச்சல். பணச் செலவு, மனக் குழப்பம், நண்பர் தொல்லை.

**துலாம் :–** பண வரவு, காரிய அனுகூலம், மன நிம்மதி, வீண் பயம்.

**விருச்சிகம்–** காரிய ஜெயம், பண வரவு, பொருட் செலவு, வீண் அலைச்சல்.

**தனுசு:–** மனக் குழப்பம், கலகம், வீண் பயம், திருடர் தொல்லை.

**மகரம்:–** பண வரவு, அதிர்ஷ்டம், வீண் அலைச்சல், திருடர் பயம்.

**கும்பம் :–** பொருட் செலவு, வீண் விரயம், மனக் குழப்பம், கலகம்.


**மீனம்:–** பணச் செலவு, காரிய அனுகூலம், மனநிம்மதி, வீண் பயம்.



புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் யாழ். மேதினக் கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது நிகழ்வின் பதிவுகள் சில... (படம்: தமிழ்வாணன்)

# நிபுணர்குழு அறிக்கையைப் பயன்படுத்தி போலியான தேசப்பற்றை உருவாக்க முயற்சி

## ஜே.வி.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

உழைக்கும் மக்களின் பிரச்சினை களை மூடி மறைப்பதற்காக அரசாங்கம் ஐ.நாவின் நிபுணர்குழு அறிக்கையைப் பயன்படுத்தி வருவதுடன், இதன் மூலம் அரசாங்கம் போலியான தேசப்பற்று ஒன்றை வெளிப்படுத்தி வருகின்றது என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பீ.ஆர்.சி.மைதானத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித் ததாவது-

பலகட்சிப் பேரவை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண் டும். இதன் மூலம் இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளுக்கு பலகட்சிப் பேரவையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அத்துடன், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்களில் பலகட்சி பேரவையின் ஒத்துழைப்பைப் பெறுக் கொள்ள முடியும்.

அரசாங்கம் போலியான ஒரு தேசப் பற்றை வெளிப்படுத்தி வருகின்றது. அர சாங்க அதிகாரிகளுக்கு மின்சார நாற் காலி தண்டனை விதிக்கப்பட உள்ளதாக பிரச்சாரம் செய்து வருகிறது.

இலங்கை அரசாங்கத்தின் எந்தவொரு உத்தியோகத்தரும் மின்சார நாற்காலித் தண்டனையினால் பாதிக்கப்படமாட்டார் கள். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் நிபு ணர் குழு அறிக்கையை ஜே.வி.பி முற்று முழுதாக நிராகரிக்கின்றது என அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

காலனித்துவ நாடுகளின் தேவைக ளுக்காக இலங்கைக்கு எதிராக நடவ டிக்கை எடுக்க அனுமதி அளிக்கப்படமாட் டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வரப்பிரசாதங்கள் கிடைக்கவில்லை

(கொழும்பு)



பன்முகப்படுத் தப்பட்ட நிதியில் இருந்து நாடாளு மன்ற உறுப்பினர் களுக்கு கிடைக்க வேண்டிய வரப் பிரசாதங்கள் இது வரை கிடைக்க வில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற றம் சுமத்தியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை அந்த கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல வெளியிட்டுள்ளார்.

வடகொழுவ விகாரையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரை யாற்றிய போதே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதமர் டி.எம். ஜய ரட்னவும் கலந்துகொண்டிருந்தார்.

இந்தத் தருணத்திலேயே, பன்முகப்ப டுத்தப்பட்ட நிதியில் இருந்து நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசா தங்கள் தொடர்பில் லக்ஷ்மன் கிரியெல்ல, இவ்வாறு பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

# இலங்கை விவகாரத்தைக் கையாண்ட இந்திய வெளிவிவகார அதிகாரி மாற்றம்

(கொழும்பு)

இலங்கை உட்பட பல்வேறு நாடுக ளின் விவகாரங்களைக் கையாண்டு வந்த இந்திய வெளிவிவகார அமைச் சின் சிரேஷ்ட அதிகாரி திருமூர்த்தி வேறு பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவின் உத்தரவின் பேரில் இந்த மாற்றம் இடம்பெற்றுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சில் பிராந்திய விவகாரங்களைக் கவனிக்கும் சிரேஷ்ட அதிகாரிகள் மட்டத்தில் மாற் றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய இதுவரை இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவு விவகாரங்க ளைக் கையாண்டு வந்த மேலதிக செய லர் திருமூர்த்தி வேறு பிரிவுக்கு மாற் றப்பட்டுள்ளார்.

இந்தப் பிரிவைக் கவனிக்கும் பொறுப்பு தற்போது ஹர்ஸ் வர்தன் சிங்லாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட விவகாரங்களை கவனித்து வந்த திருமூர்த்தி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது மிகவும் ஆச்சரியத் துக்குரிய விடயம் என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் இலங்கைக்கான பயணங்களை மேற்கொண்டவர் என்பதும், இலங்கை அரசுடனான உறவுகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வாழைச் சேனையில் ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூக்கறுகல் அம்புஸ்குடா பிரதேசத் தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.எம்.பி.ஜயவீர தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை யடுத்து குறித்த பிரதேசத்தைச் சோதனையிட்டபோதே கிரனைட் 10, சயனைட் குப்பி 02, டெட்டனேட்டர் 30, ஜொனிபட் 01, ஜொனிபட் பீஸ் 02 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

இப்பொருட்களின் ஜொனி பட்டியில் JONY SPECIAL – 95 MADE IN TAMIL EELAM என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

இவை யுத்தகாலத்தில் புலிகளால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களாக இருக்கலாம் எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.எம்.பி.ஜயவீர தெரி வித்தார்.

# இன்று சமர்ப்பணம்

(கொழும்பு)

உள்ளூராட்சித் திருத்தச் சட்டமூலம் இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் சமர்ப் பிக்கப்படவுள்ளது. இதன்மூலம் தற்பொழுது நடைமுறையில் உள்ள உள்ளூராட்சித் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரப்படவுள் ளது. தொகுதிவாரி மற்றும் விகிதாசார மாதிரியில் அமைந்த கலப்புத் தேர்தல் முறை யொன்றை ஏற்படுத்தும் முயற்சியில் அர சாங்கம் ஈடுபட்டுள்ளது. இதற்கான அனும தியை பெறுவதற்காக இன்று செவ்வாய்க் கிழமை குறித்த திருத்தச் சட்டமூலம் நாடா ளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. குறித்த சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மறுநாள் விவாதத்திற்கு விடப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

# இங்கிலாந்து செல்லும் இலங்கை அணிக்கு இடையூறு விளைவிப்பதற்கு முயற்சி

## என்கிறது கொழும்பு நாளேடு

(கொழும்பு)

பிரித்தானியாவுக்குப் பயணம் மேற் கொள்ளவுள்ள இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு இடையூறு விளைவிக்க அங் குள்ள புலிகளின் ஆதரவு சக்திகள் திட்ட மிட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அணியை இலக்கு வைத் துத் தீவிரமான பேரணிகள், போராட் டங்களை அவர்கள் நடத்தவுள்ளதாகவும், இலங்கை அணியின் பயணத்தை நிறுத் தச் செய்வதற்கு பிரித்தானிய கிரிக்கெட் சபைக்கு அழுத்தம் கொடுக்க முனைவ தாகவும், இலங்கை அரசின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

பிரித்தானியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்யும் இலங்கை அணியின் பாதுகாப் புக்கு பிரித்தானிய அதிகாரிகளே பொறுப்பு என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள் ளார்.

ஒக்ஸ்பிரிஜ் மைதானத்தில் எதிர் வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள முத லாவது ஆட்டத்தில் பங்கேற்கும் இலங்கை அணிக்கு எதிராக பெருமளவிலான சமூகப் பரப்புரையாளர்கள் எதிர்ப்புப் போராட்டங்களை ஒருங்கிணைக்கவுள்ள தாகவும் இலங்கை அரச அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

அவர்கள் இந்த ஆட்டத்தைக் குழப்ப எத்தனிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

அதேவேளை, பிரித்தானியாவி லுள்ள புலிகளின் ஆதரவாளர்களும், இலங்கை கிரிக்கெட் அணியைத் தடை செய்யக்கோரும் பரப்புரைத் தகவல்க ளைப் பரிமாறி வருகின்றனர்.

சிம்பாப்வே, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கு எதிராக முன்னர் கொண்டு வரப்பட்ட தடைகளைப் போலவே இலங்கை மீது தடைவிதிக்க வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.

போர்க்குற்றவாளிகள் என இலங கையை வர்ணிக்கும் இவர்கள், பிரித் தானியா அவர்களை வரவேற்கக் கூடாது என்று கோருவதாகவும் கொழும்பு ஆங்கில நாளேடு குறிப்பிட்டுள்ளது.

# சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தமே அரச ஊழியருக்கான சம்பள உயர்வை தடுத்தது

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் காரணமாகவே அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வு எது வும் வழங்கப்படவில்லையென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை இரத்துச் செய்து உழைக் கும் மக்களுக்கு நலன்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டு மென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.


பண்டாரவளை பிரதேசத்தில் நடை பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த முடிவின் பின்னர் மக்களுக்கு நன்மைகள் வழங்குவதாக அறிவித்த போதிலும் இதுவரையில் எவ்வித நன்மையும் அளிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறையாண்மைக்கு முர ணான வகையில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய் துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் இந்த அரசாங்கத்தை மக்க ளின் நண்பனாக கருதுவதனை விடவும் மக்களின் எதிரியாகவே நோக்க வேண்டு மென அவர் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, அமைச்சர் தொண்ட மானின் ஒப்பந்தம் காரணமாக பெருந் தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் இன்னமும் 405 ரூபாவாகக்



காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் மட்டுமே சம்பள உயர்விற்காகக் குரல் கொடுத்து வருவ தாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்ட நிர்ணய சதி தொடர்பான அறிக்கை இன்று வெளிவருகிறது



(கொழும்பு)


இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் எவ்வாறு ஆட்ட நிர்ணயச் சதியில் ஈடுபட்டார்கள் என்ற விபரமான அறிக்கையை இன்றைய தினம் விபரமாக வெளியிட உள்ளதாக ஹசான் திலகரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 1992ஆம் ஆண்டு முதல் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் ஆட்ட நிர்ணயச் சதியில் ஈடுபட்டார்களென ஹசான் திலகரட்ன ஊடகங்களுக்குத் தெரிவித்ததுடன் அது தொடர்பான விபரங்களை வெளியிடப்போவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

எந்தவொரு வீரரும் ஆட்ட நிர்ணயச் சதியில் ஈடுபடவில்லையென விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மறுப்புத் தெரிவித்திருந்தார். அத்துடன் ஹசான் திலகரட்ன, வீரர்கள் ஆட்ட நிர்ணயச் சதியில் ஈடுபட்டிருந்தால் அதனை ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டுமென மஹேல ஜெயவர்த்தனவும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையிலேயே ஆட்ட நிர்ணயச் சதி தொடர்பான விபரமான அறிக்கையை இன்றைய தினம் வெளியிடவுள்ளதாக ஹசான் திலகரட்ன தெரிவித்துள்ளார்.

# பெரும்புள்ளிகள் மாட்டுப்படுவர்



(கராச்சி)

ஹசான் திலகரட்ன உண்மைகளை வெளிப்படுத்தினால் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல பெரும்புள்ளிகள் அம்பலப்படுத்தப்படுவார்கள் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் லத்தீப் தெரிவித்தார்.

ஆட்டநிர்ணய சதி மற்றும் கிரிக்கெட் ஊழல்களுக்கு எதிராக தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வரும் லத்தீப், ஹசான் திலகரட்னவுக்கு ஆதரவுக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஹசான் திலகரட்ன மனம் திறந்து பேசும்போது, இந்த ஊழலுடன் சம்பந்தப்பட்ட பல பெரும்புள்ளிகள் அம்பலப்படுத்தப்படுவர் என நான் நம்புகின்றேன்.

அவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன். 1993-94 ஆம் ஆண்டிலேயே அவர் இவ்விடயம் குறித்துப் பேசியுள்ளார். அவரைவிட உப கண்டத்து வீரர்களை நன்கு அறிந்தவர்கள் இருக்க முடியாது. அவர் உண்மைகளை வெளிப்படுத்தினால் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல பெரும்புள்ளிகள் அம்பலப்படுத்தப்படுவார்கள் என லத்தீப் கூறியுள்ளார்.




# சேர்பிய ஓப்பன் ரென்னிஸ் கிண்ணம்வென்றார் ஜோகோவிச்




(சேர்பியா)

சேர்பிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் கிண்ணத்தை சேர்பியாவின் நோவோக் ஜோகோவிச் சுவீகரித்துக்கொண்டார்.

சேர்பியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் ஸ்பானியாவின் பெலிசியானோ லோப்வெசை 7-6, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றே அவர் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டார்.

இவ்வருட ஆரம்பத்தில் அவுஸ்ரேலிய ஓப்பன் பட்டம் வென்ற இவர் பெற்ற ஐந்தாவது கிண்ணம் இதுவாகும்.

சொந்த மண்ணில் கிண்ணம் வென்றது குறித்து கருத்துத் தெரிவித்த 24 வயதான ஜோகோவிச், சேர்பிய ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளை பிரபல்யப்படுத்த மிகுந்த முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இதற்காக உலகின் பிரபல ரென்னிஸ் வீரர்கள் அனைவருடனும் தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றேன். சேர்பிய ஓப்பனில் வந்து கலந்துகொண்ட ஸ்பானியாவின் வெலிசியானோவிற்கு எனது நன்றிகள்.

சேர்பிய ஓப்பன் ரென்னிஸ் போட்டிகள் 2009ஆம் ஆண்டு ஆரம்பித்தபோது இவரே முதல் முறையாக கிண்ணத்தை வென்றார். அடுத்த வருடம் சேர்பிய ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளை மிகப் பிரபல்யங்களின் பங்களிப்போடு அரங்கேற்ற முயல்வோம்.

மட்கிட் மாஸ்டர்ஸ் போட்டிகள் சேர்பிய ஓப்பன் போட்டிகளுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் அமைவதே தடையாக இருக்கிறது. இருந்தும் சேர்பிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி களை மிக பலம் வாய்ந்த இடத்துக் கொண்டு வருவது எனது விருப்பம்.

அடுத்தடுத்த தொடர்களில் உலகின் முக்கியமான ரென்னிஸ் தொடராக இத்தொடர் அமையும். அதற்கான என்னாலான அனைத்து முயற்சியையும் மேற்கொண்டு, சேர்பிய ரென்னிஸ் சங்கத்துடன் செயற்படுவேன் என்றார்.

# மீண்டும் வந்த அழைப்பு



(கொழும்பு)

இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் ஐ.பி.எல்.இல் விளையாடும் வீரர்களின் இடைவெளியை நிரப்புவதற்கு இலங்கை அணியில் சகல துறை வீரர் பர்வீஸ் மஹ்ரூப் மற்றும் விக்கெட் காப்பாளர் கௌஷால் சில்வா ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.பி.எல். ரி-20 தொடரில் விளையாடுவதால் இலங்கை அணியின் முன்னணி வீரர்கள் சிலர் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் ஆரம்ப பயிற்சிப் போட்டிகளில் பங்கேற்க மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் புதிய அணித் தலைவர் டி.எம்.டில்சான் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் ஆரம்பப் பயிற்சிப் போட்டி முதல் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ள முன்னணி வீரர்களான சங்கக்கார, மஹேல ஜயவர்தன ஆகியோர் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் ஆரம்ப பயிற்சிப் போட்டிகளில் விளையாடமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் இடைவெளியை நிரப்பவே மஹ்ரூப், சில்வா ஆகியோர் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதில் மஹ்ரூப் தற்போது இங்கிலாந்து முதல்தர போட்டியில் லங்காஷயர் அணிக்காக விளையாடி வருகிறார். அவர் இந்தத் தொடரில் சதம் ஒன்றையும் பெற்றுள்ளார்.

எனவே, அவர் நேரடியாக இலங்கை அணியுடன் இணைந்து கொள்ளவுள்ளார். மஹ்ரூப் இலங்கை அணிக்காக கடைசியாக டெஸ்ட் போட்டி ஒன்றில் விளையாடியது கடந்த 2007ஆம் ஆண்டில் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோன்று 24 வயதான கௌஷால் சில்வா இலங்கை முதல் தரப் போட்டிகளில் சிறப்பாகச் செயல்படுகிறார்.

# வெட்கக்கேடானதாம்



(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணிக்கு உள்நாட்டு பயிற்றுநர் ஒருவரைத் தேடிக்கொள்ள முடியாத நிலை வெட்கக்கேடானது என இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இப்பிராந்தியத்தில் பல சிறந்த வீரர்களை உருவாக்கிய நாடு என்ற வகையில் அதன் சொந்த தேசிய அணிக்கு உள்நாட்டு பயிற்றுநர் ஒருவரை கண்டறிய முடியவில்லை என்பது ஆச்சரியமளிக்கிறது. உள்நாட்டு விளையாட்டு வீரர்களின் திறமையையும் ஆற்றலையும் பயன்படுத்துவது போல் உள்நாட்டு பயிற்றுவிப்புத் திறமையையும் வளர்க்க வேண்டியது அவசியமாகும். முதல் நிலை பயிற்றுநரை தேடிக்கொள்வது அனைத்து நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்குமே சிரமமான விடயமாக உள்ளதாக சங்கக்கார ஒப்புக்கொண்டுள்ளார்.

இலங்கையில் தேசிய அணிக்கு பயிற்றுவிப்பதற்குப் போதிய ஆற்றலுள்ள சந்திக்க ஹத்துருசிங்கவை நாம் அவுஸ்ரேலியாவிடம் இழந்துவிட்டோம் என்றார்.

# அதிஷ்டக்காரக் கங்குலி



(கொல்கத்தா)

கொல்கத்தா அணிக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்தார் கங்குலி. இவர், ஈடன் கார்டன் மைதானத்துக்கு வந்து போட்டியைக் கண்டு களித்ததால், அணி சிறப்பான வெற்றி பெற்றது என, ஷாருக்கான் தெரிவித்தார்.


பஞ்சாப் அணிக்கெதிராக கொல்கத்தா ஆடிய போட்டியைக் காண நேரில் வந்து அதிர்ச்சி அளித்தார் கங்குலி. இவர் வந்த நேரம் ராசியானதாக அமைந்தது. கடந்த இரு போட்டிகளில் சொந்த மண்ணில் இரண்டு தோல்வியைச் சந்தித்த கொல்கத்தா அணி, பஞ்சாப் அணியை வீழ்த்தி, வெற்றிப் பாதைக்குத் திரும்பியது.

இது குறித்து கங்குலி கூறுகையில், ஈடன் கார்டன் மைதானத்தின் பார்வையாளர் வரிசையில் அமர்ந்து ரசிகர்களுடன் போட்டியைப் பார்த்தது மிகச் சிறந்த அனுபவமாக அமைந்தது. நான் போட்டியைக் காண வந்த நேரம், கொல்கத்தா அணிக்கு அதிர்ஷ்டம் அடித்துள்ளது. உள்ளூரில் இரண்டு தோல்விக்குப் பின், இம்முறை வெற்றி பெற்றுள்ளது. மனோஜ் திவாரி சிறப்பாக ஆடி வருவது அணிக்கு நல்ல விடயம் என்றார்.

முன்பு கங்குலியை ஒதுக்கிய ஷாருக், தனது கருத்தை தடாலடியாக மாற்றினார். இவர் கூறுகையில், கொல்கத்தா அணிக்கு கங்குலி அதிர்ஷ்டத்தை கொண்டு வந்தார். இவரது வருகை வெற்றிக்கு வழிவகுத்தது. நான் இருந்த இடத்தில் இருந்து, வெகு தூரத்தில் அவர் அமர்ந்திருந்தார். அதனால் தான் பேச முடியவில்லை. விரைவில் அவருடன் பேசுவேன் என்றார்.

# ரஞ்சியிலும் வேண்டும் திறமை

(மும்பை)



ஐ.பி.எல்., தொடரில் அசத்தி வரும் பஞ்சாப் அணியின் வல்தாட்டி, ரஞ்சி உள்ளிட்ட முதல் தரப் போட்டிகளில் திறமையை நிரூபிக்க வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் வீரர் வாசிம் ஜபார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது: ஐ.பி.எல்., தொடரில் வல்தாட்டியின் செயற்பாடு மகிழ்ச்சி அளிக்கிறது. சர்வதேச அனுபவம் வாய்ந்த பந்து வீச்சாளர்களைப் பதம் பார்த்த இவருக்கு, இந்திய அணியில் இடம் பிடிக்க தகுதி உள்ளது. இருப்பினும், இதுவரை முதல் தரப் போட்டிகளில் பங்கேற்காத இவர், ரஞ்சி உள்ளிட்ட முதல் தர போட்டிகளில் திறமையை நிரூபிக்க வேண்டும்.

ஏனெனில் ஐ.பி.எல்., தொடரில் 20 ஓவர்கள் கொண்ட போட்டிகள் மட்டுமே நடத்தப்படுகிறது. ஆனால் ரஞ்சி தொடரில், டெஸ்ட் போட்டிக்கு இணையாக நான்கு நாட்கள் போட்டி நடக்கும். ரஞ்சி உள்ளிட்ட முதல் தர தொடர்களின் மூலம், இளம் வீரர்களின் திறமையைக் கண்டறியலாம். இத்தொடரின் மூலம் சிறந்த அனுபவம் பெறலாம். அதன் மூலம் சர்வதேச போட்டிகளில் சிறப்பாகச் செயற்படக்கூடிய ஆற்றல் அவருக்கு ஏற்படும். எனவே, இதனை அவர் கருத்தில் கொள்ளவேண்டும் என்றார்.

# ஏமனில் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில்

(சனா)

ஏமனில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்க்க, வளைகுடா கூட்டுறவு கவுன்சில் (ஜி.சி.சி.) பரிந்துரைத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட, அதிபர் சலே திடீரென மறுத்து விட்டார். இதனால், ஜி.சி.சி.யின் சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

ஏமன் அதிபர் சலே பதவி விலகுவது குறித்து, ஜி.சி.சி. சில பரிந்துரைகளை முன்வைத்தது. அதன்படி, 30 நாட்களில் சலே பதவி விலக வேண்டும். ஆளும்கட்சி 50 சதவீதம், எதிர்க் கட்சி 40 சதவீதம், பிறகட்சிகள் 10 சதவீதம் கொண்ட ஒரு ஆட்சியை அமைக்க வேண்டும். அதிலிருந்து 60 நாட்களில் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும்.




முதலில் இப்பரிந்துரைகளை அதிபர் சலேயும், எதிர்க் கட்சிகளும் ஏற்றுக் கொண்டன. ஆனால், மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. போராட்ட காலத்தில் மக்களைக் கொன்று குவித்தது, நாட்டின் சொத்துக்களைக் கொள்ளையடித்தது உட்பட பல்வேறு குற்றங்களுக்காக, சலே விசாரிக்கப்பட வேண்டும் என்ற மக்களின் நிலையை இத்திட்டம் தந்திரமாக நிராகரித்ததை மக்கள் உணர்ந்து கொண்டனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம், ஜி.சி.சி. பொதுச் செயலர் அப்துல் லத்தீப் அல் ஜய்யானி, ஏமன் தலைநகர் சனாவுக்கு வந்து அதிபரைச் சந்தித்து, ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காகப் பேசினார். இது குறித்து நான்கு சுற்றுப் பேச்சு வார்த்தைகளை சலேயுடன் அவர் நடத்தினார். ஆனால், ஒவ்வொரு சுற்றின்போதும், சலே புதிய புதிய நிபந்தனைகளைப் போட்டதால், தன் முயற்சி தோல்வியில் முடிந்ததாக ஜய்யானி தெரிவித்தார்.

இதனால் நேற்று முன்தினம், அவர் மீண்டும் ரியாத்துக்கு வெறும் கையுடன் திரும்பிச் சென்றார். இதனால், விரைவில் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட ஏமன் அரசியல் நெருக்கடி, மேலும் நீடிக்கும் நிலை உருவாகியுள்ளது.

# ஹோட்டலில் பற்றிய தீயினால் சீனாவில் பத்துப் பேர் மரணம்

(பீஜிங்)

சீனாவிலுள்ள ஹோட்டலொன்றில் திடீரெனப் பற்றிய தீயினால் பத்துப்பேர் உயிரிழந்ததுடன், 35 பேர் காயமடைந்தனர்.

சீனாவில் வட கொரியா எல்லையில் ஜிலின் மாகாணம் உள்ளது. அங்கு தொழிற்சாலைகள் மிகுந்த தொங்காவா நகரில் ஒரு நட்சத்திர ஹோட்டல் உள்ளது. 7 மாடிகளைக் கொண்ட அந்த ஹோட்டலில் நேற்று அதிகாலை 3.30 மணி அளவில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது.

தொடக்கத்தில் முதல் தளத்தில் பிடித்த தீ மளமள வென 2 ஆவது மாடிக்கும் பரவியது. இதனால் ஹோட்டலில் இருந்து கரும் புகை வெளியேறியது. இதைப்பார்த்த அக்கம் பக்கத்தினர் தீயணைப்புப் படையினருக்கு தகவல் கொடுத்தனர். உடனே தீயணைப்பு வண்டிகளில் விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடித் தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



அவர்களில் 3 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் புகை மூட்டத்தில் மூச்சுத் திணறி பலியாகி உள்ளனர். அவர்கள் அங்கு தங்கியிருந்தபோது இந்த தீவிபத்தில் சிக்கி இறந்துள்ளனர். தீவிபத்துக்கான காரணம் தெரியவில்லை. இதுகுறித்து விசாரணை நடக்கிறது.

# 12 வயது சிறுவன் தற்கொலைத் தாக்குதல் ஏழு பேர் உயிரிழப்பு, பலர் படுகாயம்

(காபுல்)


ஆப்கானிஸ்தானில் தலிபான்கள், 12 வயதுச் சிறுவனை மனித வெடிகுண்டாக வைத்து தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதில் 4 பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர். ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ளது பக்டிகா மாகாணம். பர்மால் மாவட்டத்திலுள்ள சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அப்போது திடீரென 12 வயது மதிக்கத்தக்க சிறுவன் மனித வெடிகுண்டாக சந்தைப் பகுதிக்குள் நுழைந்து தன்னை வெடிக்கச் செய்தான்.

இதில் ஒரு பெண் உட்பட 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியாயினர்.

12 பேர் காயமடைந்தனர். சம்பவம் நடந்த இடத்தில் பாதுகாப்புப்படையினர் ஆய்வு செய்ததில் 12 வயதுச் சிறுவன் மனித வெடிகுண்டாக வந்தது தெரியவந்து.

வெடிகுண்டால் சிதறிக் கிடந்த அந்தச் சிறுவன் தலிபான்களால் மனித வெடிகுண்டாக அனுப்பப்பட்டிருக்கலாம் எனப் பக்டிகா மாகாண செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இளைஞர்களை மனித வெடிகுண்டாக பயன்படுத்தி வந்த தலிபான்கள் தற்போது சிறார்களையும் ஈடுபடுத்தி வருவது ஆப்கான் பாதுகாப்புப்படையினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



ஐவரி கோஸ்ட் தீவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஐ.நா சபை பொது செயலாளர் கோபி அன்னான (வலது) அபித்ஜான் நகரில் அதிபர் அலாசானே குவாட்டரா (இடது)வை சந்தித்தார்



# குறள் சொல்லும் கதைகள் -36

இன்பத்துப் பால்

## தோன்றாதிரு

"இனி எப்போ சந்திக்கலாம்" ஏக்கத்துடன் கேட்டான் நகுலன்.

"அடிக்கடி சந்தித்தால் காதலின் மகிமை குறைந்துவிடும். காதலன், காதலியைக் காணாது ஏங்கித் தவித்தாற்தான் காதல் வளரும். அந்தக் காதலில்தான் சுவையும் இருக்கும்" என்றாள் வித்தியா.

அனுபவத்தைச் சொல்கிறா என்றான் கஜேந்திரன்.

அர்ச்சகா உதடு பிரியாமல் சிரித்தாள். எனினும் நகுலன் கேட்டதற்கு உடனடியாக அவளால் பதில் கூற முடியவில்லை.

காதலர்கள் திட்டமிட்டுக் குறித்த நாளில் சந்திப்பது முடியாத காரியம். தினமும் சந்திப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுதல் வேண்டும். சந்திக்கக் கிடைத்தால் அதிர்ஷ்டமென்று நினைத்துக் கொள்ள வேண்டும் என்றாள் வித்தியா.

"அர்ச்சகா! நீ உன் மனதில் உள்ள எல்லாவற்றையும் எழுதி வித்தியாவிடம் கொடு. நான் நகுலனிடம் இருந்து பதில் வாங்கி வந்து தருகிறேன். ஆனால் காதலித்துவிட்டு ஏமாற்றாமல் இருந்தால் சரி" என்றான் கஜேந்திரன்.

"உனக்கு எந்தெந்த நேரத்தில் என்னென்ன கதைகள் பேசவேண்டும் என்று தெரியாது". கோபித்தான் நகுலன்.

"உவர் உப்பிடித்தான். கதைக்கக்கூடாத கதைகளைத்தான் அடிக்கடி கதைப்பார். நான் எத்தனையோ தரம் சொல்லிப் போட்டன். திருந்திறதாய் இல்லை" என்றாள் வித்தியா.

"அர்ச்சகா உம்மை நம்பித்தான் நகுலனைக் காதலிக்கிறாள். பிறகு இவன் தற்செயலாய் கஜேந்திரன் கதைக்கும்போது நகுலன் குறுக்கிட்டான். "முன்பு நான் உதவி கேட்டபோதும் இப்பிடித்தான் கதைத்தனீ. அதை நம்பியிருந்தால் இப்படிக் கதைக்கமாட்டாய்" என்றான் நகுலன்.

"அவர் பயப்படுவதில் நியாயம் இருக்கிறது. எதையும் நன்கு தீர்மானித்த பின்பே முடிவை எடுத்தல் வேண்டும். நான் நன்கு தீர்மானித்துத்தான் முடிவு எடுத்துள்ளேன். தன்னைப்பற்றி முழுவிபரத்தையும் விரிவாக அவர் கடிதத்தில் எழுதியுள்ளமையால் நான் அவரை நம்பிச் சந்திக்க வந்தேன்" என்றாள் அர்ச்சகா.

"நீ எல்லா உதவிகளும் செய்வாய். ஆனால் கதைக்கப் பேசத்தான் தெரியாது. நீயும் வித்தியாவும் செய்த உதவியை நான் கடைசி வரையும் மறக்கமாட்டேன்" என்றான் நகுலன்.

"வாயால் கூறினால் எப்படி? ஒரு பெரிய விருந்து வைக்க வேண்டும்" என்றான் கஜேந்திரன்.

"விருந்துதானே வைக்க வேண்டும். நாளைக்கே வைக்கிறன்" என்றான் நகுலன்.

வீதி வந்ததும், "இனி நீங்கள் போங்கோ" என்றாள் வித்தியா. "நான் வாறன்" என்றாள் அர்ச்சகா. நகுலன் அவளது முகத்தை ஏக்கத்துடன் பார்த்தான். அவளது முகம் வாடியிருப்பது நிலவொளியில் தெளிவாகத் தெரிந்தது.


கூடியிருப்பவர்கள் பிரிவது துயரத்தைத் தரும்தான் என்று நினைத்தான் நகுலன். அர்ச்சகா சென்றுவிட்டாள். கஜேந்திரனும் சென்றுவிட்டான். ஆனால் நகுலனுக்கு வீட்டுக்குச் செல்ல விருப்பமில்லை. நடந்து சென்ற அர்ச்சகா இருந்த இடத்தைப் பார்த்தான். அவளது கால் சுவடுகள் மணலில் பதிந்திருந்தன. மெல்ல அவற்றைத் தொட்டுப் பார்த்தான். அர்ச்சகாவைத் தொடுவதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. கைக்குட்டையை எடுத்து அவளது காலடி பதிந்த மண்ணை அள்ளி எடுத்து அதில் பவுத்திரப்படுத்தினான். அவள் இருந்த இடத்தில் இருந்து நிலவைப் பார்த்தான். அதற்குள் அர்ச்சகாவின் முகம் தோன்றிச் சிரித்தது. முன்பு நிலவில் இருந்த களங்கத்தைக் காணவில்லை. முன்பைவிட ஒளி அதிகரித்திருப்பதுபோல் இருந்தது. கைக்குட்டையில் சேகரித்து வைத்திருந்த மண்ணைப் பிரித்துப் பார்த்தான்.

அவளது மென்மையான கால்கள் தெரிந்தன. அவளைக் காணாதிருந்த நாட்களைவிடத் துன்பம் அதிகரித்திருப்பதைப் போலத் தோன்றியது. மலர்களைப் போன்ற கண்களையுடைய அர்ச்சகாவின் முகம் வானில் தோன்றியதைப் போன்ற பிரமை. நிலவே நீ எனது அர்ச்சகாவின் முகத்தைப் போல இருக்க விரும்பினால் நீ பலரும் பார்க்கும் வண்ணம் தோன்றாதே என்று வாய்க்குள் முணுமுணுத்தான்.

**கே.வி.குணசேகரம்**

*மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்தி யாயின்*
*பலரி காணத் தோன்றல் மதி. -குறள் - 1119*

*நிலவே மலர் போன்ற கண்களை உடைய இவளுடைய முகத்தை ஒத்திருக்க நீ விரும்பினால் பலரும் காணும் படியாக நீ தோன்றாதே.*



சனி பிரதோஷத்தை முன்னிட்டு தஞ்சாவூர் பெரிய கோவிலில் மகா நந்தியம்பெருமானுக்கு கடந்த சனிக்கிழமை குடம் குடமாக நடந்த பல்வேறு அபிஷேகங்களைக் காண திரண்டிருந்த பக்தர்களைக் காணலாம்.

# முதல் தகவல் அறிக்கை பதிவாவதற்கு முன் கலைஞர் ரி.விக்கு 200 கோடி கைமாறியது!

## சி.பி.ஐ. விளக்கமளிப்பு

(சென்னை)

**2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக சி.பி.ஐ. முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்வதற்கு முன்பு கலைஞர் ரீ.வி.க்கு ரூ.200 கோடி கைமாறியதாகவும், ஆ.ராசா தொலைத் தொடர்பு அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமா செய்த பின்னர் அந்தப் பணம் திரும்பக் கொடுக்கப்பட்டதாகவும் சி.பி.ஐ. விளக்கமளித்துள்ளது.**

2 ஜி.ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பான விசாரணையை நடத்திவரும் மத்திய புலனாய்வுத் துறை, கலைஞர் ரி.வி.க்கு ரூ. 200 கோடி எப்போது கைமாறியது என்பது குறித்த கால அட்டவணையை வெளியிட்டுள்ளது. 2 ஜி.ஸ்பெக்ட்ரம் ஊழல் பணத்தில் ரூ.200 கோடி கலைஞர் ரி.வி.க்கு கைமாறியுள்ளதாக சி.பி.ஐ. தெரிவித்துள்ளது. டி.பி.ரியாலிட்டி நிறுவத்தின் கணக்காளர் ஒருவரின் அறிக்கை சினியூக் பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் இயக்குனரின் அறிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது இந்த பணம் 2008 டிசம்பர் 3ஆம் திக்திக்கும் 2009 ஆகஸ்ட் 7 ஆம் திகதிக்கும் இடையே உள்ள காலகட்டத்தில் ஷாகித் உஸ்மான் பல்வாவின் நிறுவனத்தின் மூலமாக இந்தப் பணம் கலைஞர் ரி.வி.க்கு கைமாறியுள்ளது என்று சி.பி.ஐ. விளக்கியுள்ளது.

கலைஞர் ரி.வி.யில் கருணாநிதியின் மனைவி தயாளு அம்மாளுக்கு 60 சதவீதமும், மகள் கனிமொழிக்கு 20 சதவீதமும், நிர்வாக இயக்குனர் சரத்குமாருக்கு 20 சதவீதமும் பங்குகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. 2 ஜி.ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக கடந்த 2009 ஆம் ஆண்டு அக்டோபர் 21ஆம் திகதி மத்திய தொலைத் தொடர்பு துறையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத நபர்களின் மீது சி.பி.ஐ. எப்.ஐ.ஆர். பதிவு செய்தது.





பணப் பரிமாற்றம் தொடர்பான ஒப்பந்தங்கள் 2010 ஜனவரி 27இல் தொடங்கியுள்ளன என்றும் சி.பி.ஐ. கூறியுள்ளது.

## ஊழலில் கைதான கல்மாடி இடமாற்றம் செய்யப்பட்டார்

(புதுடில்லி)

கொமன்வெல்த் போட்டிக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சுரேஷ் கல்மாடி, சி.பி.ஐ.,யின் பழைய கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். டில்லியில், கடந்தாண்டு அக்டோபரில், கொமன்வெல்த் போட்டி நடந்தது. லண்டனில் தொடங்கிய ஜோதி ஓட்டம் முதல் கொண்டு அனைத்து நிகழ்ச்சிகளிலும், விளையாட்டுப் போட்டிக்கான உபகரணங்கள் வாங்கியது, வீரர்கள் தங்குவதற்கு கட்டப்பட்ட விடுதிகள் வரை, ஊழல் நடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக, சுரேஷ் கல்மாடியிடம் சி.பி.ஐ., பல முறை விசாரணை நடத்தியது.



சுவிட்சர்லாந்து தனியார் நிறுவனம் ஒன்றுக்கு, கல்மாடி, வரம்பு மீறி, 141 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் கொடுத்தது தெரியவந்ததால், கடந்த 25ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை சி.பி.ஐ., ஆண்டு விழா நடந்தது. இதில், பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொண்டார். புதிதாகக் கட்டப்பட்ட 11 அடுக்கு மாடியை அவர் திறந்து வைத்தார். இந்த விழா காரணமாக, சுரேஷ் கல்மாடி, சி.பி.ஐ.,யின் பழைய கட்டடத்துக்கு மாற்றப்பட்டார்.




## சாயிபாபா அறக்கட்டளை நிர்வாகிகளிடையே தலைவர் பதவியைப் பிடிப்பதற்கு கடும் மோதல்

(புட்டபர்த்தி)



பகவான் சத்ய சாயி பாபா மகாசமாதி அடைந்ததைத் தொடர்ந்து, சாயி பாபா அறக்கட்டளை நிர்வாகிளிடையே தலைவர் பதவியைப் பிடிப்பது தொடர்பாக மோதல் ஏற்பட்டுள்ளது.

சிறி சத்ய சாயி சென்டிரல் டிரஸ்ட் அறக்கட்டளைக்கு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளன.


சத்ய சாயிபாபா மரணம் அடைந்ததைத் தொடர்ந்து, அந்த சொத்துக்களை நிர்வகிப்பது, வரவு - செலவு அதிகாரத்தை தீர்மானிப்பது தொடர்பாக அறக்கட்டளையின் உறுப்பினர்கள் ஆலோசித்து வருகிறார்கள்.

சாயிபாபாவின மறைவைத் தொடர்ந்து, அறக்கட்டளையின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. சாயிபாபாவின் சகோதரர் மகன் ரத்னாகர், சாயி பாபாவின் நெருங்கிய சீடரான சத்யஜித் ஆகியோருக்கு இடையே தான் தலைவர் பதவியைப் பிடிப்பதில் கடும் போட்டி நிலவி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அறக்கட்டளையின் உறுப்பினர்கள் கூட்டம் புட்டபர்த்தியில் நடைபெற்றது.

ஆனால் தலைவரைத் தேர்வு செய்யும் பிரச்சினை தொடர்பாக உறுப்பினர்களிடையே மோதல் ஏற்பட்டதாலும், ஒருமித்த கருத்து ஏற்படாததாலும் கூட்டம் பாதியிலேயே ரத்து செய்யப்பட்டது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

## சச்சின் யோசனை



(மும்பை)

சத்ய சாயிபாபாவின் சமாதியில் அவரது தங்கச் சிலையை நிறுவ வேண்டும் என்று அவரது பக்தரும் பிரபல கிரிக்கெட் வீரருமான சச்சின் டெண்டுல்கர் யோசனை தெரிவித்தார்.

புட்டபர்த்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சத்ய சாயி மத்திய அறக்கட்டளையின் கூட்டத்தில் அவரது இந்த யோசனை, கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இக் கூட்டத்தில் அறக்கட்டளைக்கான தலைவர், செயலாளர் தேர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்ட போதிலும் வேறு எந்த முக்கிய முடிவும் எடுக்கப்படவில்லை.

## இந்தியாவில் உணவு, தண்ணீருக்கு 2030இல் பற்றாக்குறை ஏற்படும்


### சர்வதேச தண்ணீர் மேலாண்மை நிறுவனம் எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவில் 2030ஆம் ஆண்டில் தண்ணீர் மற்றும் உணவு பற்றாக்குறை ஏற்படும் என, சர்வதேச தண்ணீர் மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச தண்ணீர் மேலாண்மை நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில், உலக தட்பவெப்ப மாற்றம் மற்றும் உள்நாட்டு மக்கள் தொகை பெருக்கம் ஆகிய காரணங்களால், இந்தியா தண்ணீர் பற்றாக்குறையை சந்திக்கும். இது, அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய மற்றும் எதிர்பாராத அளவிற்கு உணவு பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தும். இந்தியாவிற்கு 700 பில்லியன் கியூபிக் மீட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இதில், 85 சதவீதம் உணவு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இந்தத் தேவை 2030ஆம் ஆண்டில், மக்கள் தொகை அதிகரிப்பால், இரண்டு மடங்காக அதிகரிக்கும். 2030ஆம் ஆண்டில், இந்தியாவின் மக்கள் தொகை, 120 கோடியில் இருந்து 160 கோடி அல்லது 170 கோடியாக அதிகரிக்கும். அதேபோல், தண்ணீர் தேவையும், இருமடங்கு, அதாவது 1,498 பில்லியன் கியூபிக் மீட்டராக அதிகரிக்கும். ஆனால், தண்ணீர் அளிப்பு 744 மில்லியன் கியூபிக் லீற்றர்களாக இருக்கும். தேவையில் பாதியளவு பற்றாக்குறையாக இருக்கும் என்பது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து இந்நிறுவனத்தின் இயக்குநர் ஜெனரல் கோலின் சார்டிரஸ் கூறுகையில், தற்போதைய நிலை நீடித்தால், மத்திய கிழக்கு நாடுகளைப் போல, தண்ணீர் நெருக்கடி நாடாக இந்தியா உருவெடுக்கும். பெரும்பாலான தண்ணீர், உணவு உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது. தண்ணீர் பற்றாக்குறை, உணவு பற்றாக்குறையிலும் எதிரொலிக்கும். தண்ணீர் இறக்குமதிக்கு பதில், இந்தியா உணவு பொருட்களை இறக்குமதி செய்ய



வேண்டி ஏற்படும். உலகளவில் மக்கள் தொகை 250 கோடி அதிகரிக்கும் போது, உணவு இறக்குமதியும் எளிதானது அல்ல. தற்போது இருப்பதை விட, அதிக வெப்பம், குறைந்த தண்ணீர் என்ற நிலைமை உலகளவில் நிலவும் என்று தெரிவித்துள்ளார்.

## தமிழகத் தேர்தல் முடிவினை கணிக்க முடியவில்லையாம்

### சிதம்பரம் கூறுகிறார்

(சென்னை)

மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழகத்தில் எந்தக் கூட்டணி வெற்றி பெறும் என்பதை கணிக்க முடியாத நிலை உள்ளது என மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

வெற்றியோ, தோல்வியோ, தேர்தல் முடிவுகள் எப்படியிருந்தாலும், அதை ஏற்றுக்கொண்டு பக்குவமாக நடந்துகொள்ள வேண்டும் என காங்கிரஸ் கட்சியினருக்கு அவர் அறிவுரை கூறினார். சிவகங்கையில் தேர்தல் பணிகள் குறித்த கருத்துரைப்புக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், கலந்துகொண்ட சிதம்பரம் மேலும் பேசியதாவது: தமிழ்நாடு, கேரளம், அசாம், புதுச்சேரி, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் சட்டப் பேரவைத் தேர்தல்கள் நடந்துள்ளன. ஆனால், தமிழகத்தில் மட்டும்தான் தேர்தல் ஆணையம் அதிக கெடுபிடி காட்டியுள்ளது.



இதற்கான காரணம் குறித்து, தேர்தல் முடிவுகள் வெளியானபின், தேர்தல் ஆணையத்திடம் விளக்கம் கேட்கப்படும்.

தமிழகத்தில் தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும் என்பதைக் கணிக்க முடியாத நிலையே உள்ளது.

முடிவு எப்படியிருந்தாலும் காங்கிரசார் பக்குவமாக ஏற்றுக் கொண்டு அதற்கேற்பச் செயற்பட வேண்டும் என்றார் சிதம்பரம்.

# குப்பை மீள் உற்பத்தித்திட்டம் வவுனியாவில் ஆரம்பம்

(கொழும்பு)

கழிவாக வீசப்படும் பொலித்தீன் போத்தல்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை உடைத்து தூளாக்கும் இயந்திரம் வவுனியா நகர சபைக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவிற்கு கொண்டுவரப்பட்டுள்ள இந்த இயந்திரம் வேப்பங்குளத்தில் உள்ள திண்மகழிவுகளை கூட்டு பசளையாக்கும் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

நாளாந்தம் வவுனியா நகரில் சேகரிக்கப்படும் பொலித்தீன் சார்ந்த பொருட்கள் குறித்த இயந்திரம் மூலம் தூள்களாக்கப்பட்டு மீண்டும் பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது என வவுனியா நகர சபை செயலாளர் எஸ் வசந்தகுமார் தெரிவித்தார்.

இந்த இயந்திரத்தின் பெறுமதி ஆறு இலட்சம் எனவும் குறிப்பிட்ட அவர் வவுனியா நகரில் நாளாந்தம் பெருமளவிலான பொலித்தீன் போத்தல்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் கழிவுகளுடன் வந்து சேருகின்றது. இவை தற்போது தரம்பிரிக்கப்பட்டு மீள்உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றன என்றும் குறிப்பிட்டார்.

# விமானப்படை வீரர் தற்கொலை

(கொழும்பு)

திருகோணமலை மொறவெவ விமானப்படைத் தளத்தில் கடமையாற்றி வந்த விமானப்படை வீரரொருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது. கண்டி, பாரரோசவத்த பகுதியைச் சேர்ந்த பி.கே.சமிந்தகுமார என்பவரே இவ்வாறு பலியானவர் ஆவார்.

கடமையிலிருந்த இவர் தனது காதலியுடன் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த வேளையில் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இவர் பயன்படுத்திய தொலைபேசியையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவரின் சடலத்தைப் பார்வையிட்ட திருகோணமலை நீதிமன்ற நீதிவான், சடலத்தை அவரின் உறவினர்கள் பார்வையிட்ட பின்னர் சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.திருகோணமலை பொதுவைத்தியசாலையில் இவரது சடலம் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மொறவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உறுதி வழங்கல் நிறுத்தம்

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் காணிகளில் உள்ளவர்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதை உடனடியாக இடைநிறுத்துமாறு,காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

சட்ட விரோதமானவர்களுக்கு உறுதிப் பத்திரம் வழங்குவதை விட, உண்மையிலேயே உறுதிப் பத்திரம் வழங்க தகமைபெற்ற ஏராளமானவர்கள் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தம்புள்ள பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# சொந்தக்காணிகளில் குடியமரும் மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு ஏற்பாடு

(கொக்கிளாய்)

**சொந்தக் காணிகளைத் திருத்தி அதற்குள் குடியிருந்தால் மட்டும் வீடமைப்புத்திட்டத்திற்குள் மக்கள் உள்வாங்கப்படுவார்களென முல்லைத்தீவு மாவட்ட செயல க அதிகாரிகள், மீள்குடியேறிய மக்களிடம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,**

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரிநிலையத்தில் தங்கவைக்கப்பட்டு,மீளவும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்வதற்காக அழைத்துவரப்பட்ட கொக்கிளாய் மக்கள்,கொக்கிளாய் அ.த.க பாடசாலையின் மைதானத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.


இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் பற்றைகள் மண்டிய தமது சொந்தக்காணிகளைத் திருத்தி அதற்குள் கொட்டில்களை அமைத்தால் மட்டுமே வீடமைப்புத் திட்டத்திற்குள் உள்வாங்கப்படுவரெனவும் இதற்கான செயற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொக்கிளாயை சொந்த இடமாகக்கொண்டு வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி தமது உறவினர்,நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் குடும்பங்களும்,அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கான ஒழுங்குகளையும் முல்லை செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

இவர்களுக்கான பதிவுகள் கடந்த வாரம் செம்மலை மகாவித்தியாலயத்தில் மேற்கொள்ளப்பட்டது இதற்கமைய அவர்கள் கொக்கிளாய்ப் பகுதியில் விரைவில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். (17)

# மக்களின் பிரச்சினைகளை மறைக்க நிபுணர்குழு அறிக்கையை பயன்படுத்தாதீர்

## அரசுக்கு அர்ஜுன எம்.பி ஆலோசனை



(கொழும்பு)

மக்கள் பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கு பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையைப் பயன்படுத்தக் கூடாது என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பாணந்துறைப் பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பில் எதிர்ப்பை வெளியிடும் பல அமைச்சர்கள் அறிக்கையை முழுமையாக வாசித்தார்களா என்பது சந்தேகமே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில்ஊழல் மோசடிகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகவும் நாட்டின் பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காக பான் கீ மூனின் அறிக்கையைப் பயன்படுத்தக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

# அரசு-கூட்டமைப்பு பேச்சிற்கு புதிய தலைவராக ரஜீவ் விஜேசிங்க

(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைக்கென அமைக்கப்பட்டுள்ள குழுவின் புதிய தலைவராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ் விஜேசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

குழுவின் தலைவராக கடமையாற்றிய ரட்ணசிறி விக்கிரமநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து, அப்பதவிக்கு புதியவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதென தமிழத் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். ரட்ணசிறி விக்ரம நாயக்க பதவி விலகியமை அரசதரப்புடனான பேச்சு வார்த்தைக்கு இடையூறாக அமையா தெனவும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா நிபுணர் குழு அறிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளதால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தான் தயார் இல்லை எனத் தெரிவித்து சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சியில் மீள்குடியமர்ந்தவர்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்கப்படுகிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சிமாவட்டத்தில் மீள்குடியேற்றத்தின்பின்னர் இன்றுவரை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் வீடமைப்புக்கடனாக கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும்பொது மக்களுக்கு பலமில்லியன்ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அறிவியல் நகரில் புதிதாக ஐம்பது வீடுகளும் அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அரச உத்தியோகத்தர்களுக்கு ஐந்துலட்சம் ரூபாவீதம் 28பேருக்கு 12.5வீதவட்டியுடனும் ஏனையோருக்கு இரண்டு லட்சம்ருபாவீதம் 93 பயனாளிகளுக்கு11வீத வட்டியிலும் வழங்கப்பட்டுள்ளது. அக்கடன்கள் 10வருடக் காலத் தவணையின்அடிப்படையிலும் சில பயனாளிகளின் விருப்பிற்கமைய ஐந்துவருடத்தவணைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்டமுகாமையாளர் எம். ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இதைவிட அறிவியல்நகர்பகுதியில அமைக்கப்பட்ட ஐம்பதுவீட்டுத் திட்டம் போன்று கிளிநொச்சிமாவட்டத்தில் புதிதாக ஒரு ஐம்பது வீட்டுத்திட்டத்தை அமைக்கவுள்ளதாகவும் மீள்குடியேற்ற அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளவிருக்கும் இத்திட்டமானது, பெரும்பாலும் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் ஆரம்பிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (29)

# வேகமாகத்திருத்தப்படும் செம்மலை ஊடான வீதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இருந்து செம்மலை ஊடாக நாயாறு, கொக்கிளாய் முகத்துவாரம் வரை செல்லும் பிரதான வீதி செப்பனிடும் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மக்கள் மீள்குடியமர்ந்த நிலையில் நீண்ட பிரதான வீதி 'காபற்' வீதியாக திருத்தியமைக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவில் இருந்து 36 கி.மீற்றர் நீளமான இவ்வீதியில் திருத்தப் பணிகள் நிறைவடையும் பட்சத்தில் தமது பயணம் இலகுவாகவும் நேரத்தை மீதப்படுத்துவதாகவும் இருக்கும் என மீள்குடியமர்ந்த மக்கள் தெரிவித்தனர். (17)

# கையொப்பம் பெற நடமாடும் சேவை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் யுத்த குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறும் தருஸ்மன் அறிக்கைக்கு எதிராக 10இலட்சம் பேரின் கையொப்பங்களை பெறும் தேசிய வேலைத் திட்டத்தில் நாட்டின் அனைத்து சமூகத்தினரும் பங்குபற்றும் வகையில் அத்திட்டத்தை விரிவுபடுத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத்திட்டத்தினை விஸ்தரிக்கும் நோக்கில்,நேற்றுக் காலை 9 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்பாடுகள் எதிர்வரும் 10 நாட்களுக்கு நாடளாவிய ரீதியில் இடம் பெறும். நடமாடும் வாகனங்கள் மூலம் மக்களின் கையொப்பங்கள் பெறப்படவுள்ளன என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# சலசலப்பு அரசியல் உரிமைகளை வென்று தராது சிதைந்துபோன தேசத்தை தூக்கி நிறுத்த வாரீர்

## கொழும்பு மேதின எழுச்சியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறைகூவல்



**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பிரமாண்டமான மேதின எழுச்சிப்பேரணியின் இறுதியில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நிகழ்த்திய உரையின் முழுமையான வடிவத்தை இங்கே தருகிறோம்.**

மே தினம் என்பது ஒரு வீரிய தினம். உழைக்கும் மக்கள் உரிமை கேட்டு எழுந்து வீதிக்கு வந்த சூரிய தினம்!உழைக்கின்ற மக்களோடு ஒடுக்கப்படுகின்ற தேசத்து மக்களும் இணைந்துஉரிமைகளுக்காக குரல் கொடுத்து நிமிர்ந்தெழுந்த தினம்.

இன்றைய தினத்தில் இலங்கை தீவில் வாழுகின்ற அனைத்து இன, சமூக மக்களும் பேரணியாக திரண்டு, ஓரணியாக எழுந்து வந்திருப்பதை கண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

உரிமைக்கு குரல் கொடுப்பதற்காகவும், உறவுக்கு கரம் கொடுப்பதற்காகவும் இலங்கைத் தீவின் சகல பாகங்களில் இருந்தும் தமிழ் மக்களும் இந்த மாபெரும் நிகழ்வில் பங்கெடுக்க வந்திருக்கிறார்கள்.

நாம் அகதிகளாக அலைந்து திரிந்த காலம் ஒழிந்து விட்டது. சொந்த வீடுகளை இழந்து சொந்த வாழ்விடங்களை விட்டு தெருத்தெருவாக படுத்துறங்கிய காலம் இன்று மாறி விட்டது. தமிழ் மக்களின் உரிமையின் பெயரால் நடத்தப்பட்ட அழிவு யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு விட்டது. இனி நாம் நிமிர்ந்தெழும் காலம்.

இந்த நாட்டில் வாழும் சக மக்களையும் போல் தமிழ் மக்களும் சம உரிமை பெற்று தலை நிமிர்ந்து வாழும் காலம் கனிந்து கொண்டிருக்கின்றது.

உரிமை என்பது வெறுமனே பேசிக்கொண்டிருப்பதற்கான விடயம் அல்ல. கால மாற்றமும், மாறிவந்திருக்கும் உலகத்தின் புதிய சூழலும் பல அனுபவங்களை எமக்கு கற்று தந்திருக்கின்றது.

கடந்த காலங்களில் நடந்த மேதினக்கூட்டங்களில் சுயலாப தமிழ் தலைமைகள் தமிழ் மக்களுக்கு வழங்கியிருந்த வெறும் வீரப்பேச்சுக்களை நான் இங்கு நினைத்து பார்க்கிறேன். அத் தலைமைகள் வழங்கிய வாக்குறுதிகளை நான் நினைத்துப்பார்க்கிறேன். அடுத்த மேதினக்கூட்டம் என்பது சுதந்திர தமிழீழத்தில் நடக்கும் என்று ஒவ்வொரு மேதினக்கூட்டங்களிலும் அவர்கள் முழக்கமிட்ட நிகழ்வுகளை நான் எண்ணிப்பார்க்கிறேன்.

இவ்வாறு முழக்கமிட்டு தமிழ் இளைஞர் யுவதிகளின் இரத்தங்களை சூடேற்றி, அவர்களை வீதிக்கு இழுத்து விட்டு அவர்கள் மக்களை விட்டும், நாட்டை விட்டும் தமது குடும்பங்களோடு ஓடிப்போன ஏமாற்றுத்தனங்களை நான் எண்ணிப்பார்க்கிறேன்.

விவேகம் இல்லாத வீரப்பேச்சுக்களும், சாணக்கிய தந்திரம் இல்லாத வெறும் சலசலப்பு அரசியலும், உரிமைகளை அடைவதற்கு மாறாக அழிந்தே தீருவோம் என்ற முரட்டுப் பிடிவாதங்களும் எமது மக்கள் மீது அழிவுகளை சுமத்தியது. அவலங்களை சுமத்தியது. எமது மக்களை அகதிகளாக அலைய வைத்தது.

இனி நாம் இங்கு முன்னெடுத்து செல்ல வேண்டிய அரசியல் வழிமுறை என்பது நடந்திருக்கவே கூடாத எமது மக்களின் அழிவுகளுக்கு பரிகாரம் தேடும் அணுகுமுறையாகவே இருக்க வேண்டும்.

அழிவுகளையும், அவலங்களையும் வைத்து அரசியல் வியாபாரம் நடத்த நாம் விரும்பவில்லை.

இந்த நாட்டில் அழிவு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

இதற்காக பாதுகாப்பு படையினர் உட்பட தமிழ் மக்களும் அதிகளவு அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். விலை மதிக்க முடியாத தங்களது உயிர்களையும் உடமைகளையும் இழந்திருக்கிறார்கள். அழிந்து, சிதைந்து போன எமது வாழ்விடங்களை மறுபடியும் தூக்கி நிறுத்தும் பணிகளில் எமது சகோதரர் பசில் ராஜபக் அவர்கள் நேரடியாகவே ஈடு பட்டு வரும் அவரது சேவைகளை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

பேசித்தீர்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் பல இருந்தும் யுத்தித்தின் மூலமே அனைத்து உரிமைகளையும் பெற முடியும் என்ற மமதையில் மயங்கி கிடந்து...

மதிநுட்பம் மறந்து, சாணக்கிய தந்திரங்களை விரும்ப மறுத்து, தமிழ் மக்களை அழிவுப்பாதைக்கு இட்டு சென்ற தமிழ் தலைமைகள் யாவும் தங்களது தூர நோக்கற்ற அரசியல் நடவடிக்கைகளை இனியாவது சுய விமர்சனம் செய்து கொள்ள தயாராக வேண்டும். அழிவு யுத்தத்தை நிறுத்தி ஆக்கபூர்வமான அரசியல் தீர்வுக்காக சகல வளங்களையும், பலங்களையும் பயன்படுத்த முன்வர வேண்டும் என்று நாம் அரசியல் தூரப்பார்வையோடு விடுத்திருந்த வேண்டுகோளை சுயலாப தமிழ் அரசியல் தலைமைகள் எவையும் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. அவ்வாறு எமது கருத்துக்களையும், வேண்டுகோள்களையும் ஏற்றுக் கொண்டு செயற்பட்டிருந்தால் யுத்தத்திற்கு யுத்தம் என்ற நிலை இங்கு ஏற்பட்டிருக்காது. அழிவுகளை சொல்லி அழுது வடிக்க வேண்டிய துயரங்கள் இங்கு நிகழ்ந்திருக்காது.

காலம் கடந்த ஞானம் போல் போர்க்குற்றம் என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் தருஷ்மனின் அறிக்கைகள் அழிந்து போன எமது மக்களின் உயிர்களையோ, அன்றி உடமைகளையே ஒரு போதும் மீட்டுத்தரப் போவதில்லை.

அழுதும் பிள்ளையை அவளே பெறவேண்டும் என்பது போல் எமது பிரச்சினைகளை நாமே பேசித்தீர்க்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

தமிழ் மக்கள் மீது யாரும் அக்கறை காட்ட விரும்பினால் இழந்து போன எமது உயிர்கள் மற்றும் உடமைகளுக்கான நஷ்ட ஈடுகளை வழங்கி உதவுமாறு நாம் ஐ. நா உட்பட சர்வ தேச சமூகத்திடமும் மனிதாபிமான வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நாம் முன்னெடுத்து செல்லுகின்ற எமது நடைமுறைச்சாத்தியமான அரசியலுரிமை பிரச்சினைக்கான தீர்வுக்காக தமது பங்களிப்பை செலுத்துமாறு அவர்களிடம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். நாம் எமது அரசாங்கத்துடன் தொடர்ந்தும் நம்பிக்கையோடு பேசுவோம். நாம் அழிவுகளில் இருந்து மீண்டெழுந்த ஒரு சமூகமாக உருவெடுப்போம், சிதைந்து போன எமது தேசத்தை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்துவோம்.அதிகாரப்பகிர்வினை அறுவடை செய்து அரசியல் தீர்வு நோக்கி முன்னேற இன்றுள்ள சூழலை நாம் பயன்படுத்துவோம். இன்று தமிழ் மக்கள் விழிப்படைந்து வருகின்றார்கள். சுயலாப அரசியல் தலைமைகள் இனியும் எம்மை ஏமாற்ற முடியாது என்ற விழிப்புணர்வோடுதான் தமிழ் மக்களும் வந்திருக்கிறார்கள். தமிழத்தேசியக் கூட்டமைப்பினர் விடுக்கின்ற வெற்றறிக்கை என்ற மாய மான்களை பின்தொடர்ந்து இனியும் நாம் ஓடப்போவதில்லை என்பதை வெளிப்படுத்தவே இங்கு தமிழ் மக்களும் வந்திருக்கிறார்கள். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் எமக்கான உரிமைகளை வழங்கியே தீருவார் என்ற நம்பிக்கையோடுதான் தமிழ் மக்களும் இங்கு வந்திருக்கிறார்கள்.

இனியும் நாங்கள் அழிவு நோக்கி நடக்க மாட்டோம். அறிவு நோக்கி சிந்தித்து நடப்போம் என்று தமிழ் மக்கள் இன்று தலைநகர் கொழும்பு நோக்கி வந்திருக்கின்றார்கள். அப்பாத்துரையும், அப்பு காமியும், அப்துல்லாவும் அழகிய எங்கள் இலங்கைத்தீவில் சம உரிமை பெற்றவர்களாக சேர்ந்து வாழும் கனவுகளை ஈடேற்றுவதற்காக தமிழ் மக்களும் சரியான திசை நோக்கி சிந்திக்க தெரிந்தவர்களாக மாறி வருகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தும் சுயலாப அரசியலுக்கு இனி இங்கு இடமில்லை. சொந்த மக்களின் அவலங்களை காட்டி அதில் ஆதாயம் தேடும் ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு இனி இங்கு ஆதரவில்லை.

நடைமுறைக்கு ஒத்துவராத கோஷங்களையும், எமது மக்களின் அவலங்களை வைத்து வாக்குகளை மட்டும் கவர்ந்து செல்லும் கபடத்தனங்களையும் தமிழ் மக்கள் இனி ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இதை நடந்து முடிந்த தேர்தல்களில் படிப்படியாக தமிழ் மக்கள் வெளிப்படுத்தி வருகிறார்கள். ஆகவே தமிழ் மக்களின் சகோதரத்துவ உணர்வுகளையும், சம உரிமைகளோடு வாழவிரும்பும் மனிதாபிமான உணர்வுகளையும் புரிந்து கொண்டு சிங்கள சகோதர மக்கள் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வாழும் சூழலை உருவாக்க முன்வர வேண்டும் என நான் தமிழ் மக்களின் சார்பாக மனிதாபிமான வேண்டுகோள் விடுக்கின்றேன். நான் தமிழ் மக்களை நேசிப்பதைப் போலவே சிங்கள சகோதர மக்களையும் நேசிக்கின்றேன். இஸ்லாமிய சகோதர மக்களையும் நேசிக்கின்றேன். எந்தவொரு சூழலிலும் சரி சிங்கள சகோதர மக்களுக்கு எதிராகவோ, அன்றி இஸ்லாமிய சகோதர மக்களுக்கு எதிராகவோ வன்முறைகளிலும் நாம் ஈடுபட்ட வரலாறு இல்லை. அவ்வாறு அப்பாவி பொது மக்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைகளை நாம் தொடர்ந்தும் கண்டித்தே வந்திருக்கின்றோம்.


ஆகவே, நாம் தமிழ் மக்கள் சார்பாக சகோதர வாஞ்சையோடு சக இன சமூக மக்களை நோக்கி நேசக்கரம் நீட்டும் தார்மீக உரிமைகளை கொண்டவர்கள் என்பதை இச்சந்தர்ப்பதில் நான் வெளிப்படுத்த விரும்புகின்றேன். தமிழ் மக்கள் மத்தியில் இருந்து இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை உருவாக்கி அதில் சுயலாப அரசியல் இலாபம் கண்டு, தமிழ் மக்களின் வாக்குகளை திருடிச் செல்லும் கபட நாடகங்களுக்கு சிங்கள சகோதரர்களோ அன்றி இஸ்லாமிய சகோதரர்களோ ஒரு போதும் இடமளிக்கக் கூடாது என்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நீங்கள் எந்தளவிற்கு தமிழ் மக்களை அரவணைத்து செல்கின்றீர்களோ, தமிழ் மக்களை சகோதர மக்களாக ஏற்றுக்கொள்கிறீர்களோ, தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றீர்களோ அந்தளவிற்கு விரைவாக இந்த நாட்டில் சுயலாப தமிழ் அரசியல் தலைமைகளின் தவறான எண்ணங்களை உடைத்தெறிய முடியும். இன சமத்துவத்தையும், சமாதான இலங்கைத்தீவையும், ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கையையும் எம் கண் முன்பாக கொண்டு வந்து நிறுத்த முடியும்.

ஓர் அமைச்சராக அல்லாமல் ஓர் அரசியல் கட்சியை வழிநடத்தி செல்லுகின்ற தலைவராக அல்லாது இந்த நாட்டில் வாழும் சாதாரண ஒரு குடிமகனாகவே உங்களில் ஒருவனாகவே நான் உங்களிடம் பேச விரும்புகின்றேன். இந்த அரசாங்கத்தின் மீது எமக்கு நம்பிக்கை உண்டு. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் மீது எமக்கு நம்பிக்கை உண்டு. அது போலவே இந்த நாட்டில வாழுகின்ற தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினையைத்தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் எடுத்து வரும் அனைத்து முயற்சிகளுக்கும் சிங்கள சகோதரர்களாகிய நீங்களும் ஆதரவு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. நாம் சூரியனையும், சந்திரனையும் பூமிக்கு கொண்டு வந்து தர வேண்டும் என்று கேட்கவில்லை. இந்த நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலான விடயங்களை நாம் கேட்கவில்லை. சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ள முடிந்த, நடை முறைச்சாத்தியமான தீர்வொன்றையே நாம் அரசாங்கத்திடம் கேட்டு வருகின்றோம்.

உழைக்கும் மக்கள் உரிமை பெற்றுகிளர்ந்தெழுந்த இத்தினத்தில், நாம் அனைவரும் சம உரிமை பெற்ற சகோதர மக்களாக வாழும் காலத்தை உருவாக்குவோம் என உறுதி பூணுவோம். இந்த அரசாங்கத்தையும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களையும் மேலும் பலப்படுத்தவும், பாதுகாக்கவும் நாம் ஒன்று பட்டு உறுதி எடுப்போம்.

இதன் மூலம் நாம் எமது எண்ணங்களை ஈடேற்றுவோம். எமது கனவுகளை நிறைவேற்றுவோம். உழைக்கும் மக்களின் உரிமைகள் இங்கு நிலை நிறுத்தப்படுவதுடன், சமவுரிமையும், சகோதரத்துவ உணர்வுகளும் கட்டியெழுப் படவேண்டும். எனத் தெரிவித்தார்.



## ஒசாமாவின் வாழ்க்கைப் பாதை

- பிறப்பு : 1957 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி சவுதி அரேபியாவின் ரியாத்.
- முழுப்பெயர் : ஒசாமா பின் முஹம்மது பின் ஆவாத் பின்லேடன்.
- ஆரம்ப ஈடுபாடு : இளம் வயதிலிருந்து வகாபி இஸ்லாமிய இயக்கம்
- கல்வி : சவுதி கீங் அப்துல்லாசிஸ் பல்கலையில் பொருளியல் பட்டதாரி. 1979 இல் சிவில் இன்ஜினியரிங் பட்டம் பெற்றவர்.
- திருமணம் : 17 வயதில் திருமணம். மூன்று பேரை மணந்தார். 25 குழந்தைகள.
- அல்கொய்தா 1979 இல் ஆப்கானில முஜாகிதீன் என்ற அமைப்பில் இருந்து செயற்பட்டார். முஜாகிதீன் அமைப்பிலிருந்து வெளியேறியவர்களைச் சேர்த்து அல்கொய்தாவை உருவாக்கினார்.
- முக்கிய தாக்குதல்கள் : 1996 இல் அமெரிக்காவுக்கு எதிராக புனிதப் போர் நடத்தப்போவதாக அறிவிப்பு.
- 2000, அக். 12 ஏமனில் கப்பல் வழித் தாக்குதல் 17 பேர் பலி.
- 2001, செப். 11 இரட்டைக் கோபுரத் தாக்குதல்.

# ஐ.நா.வுக்கு எதிரான போக்கு வேண்டாம்

# அது இலங்கையின் நற்பெயருக்கு களங்கம்

## அரசுக்கு ஆலோசனை கூறுகிறார் ரொஹான் குணரத்ன

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிங்கப்பூரில் உள்ள அரசியல் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான சர்வதேச ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளால் இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகத்தில் அநாவசிய கருத்துக்கள் வலுப்பெறலாம் என ஆய்வு நிலையத்தின் பேராசிரியர் ரொஹான் குணரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கைக்கு, ஆர்ப்பாட்டங்களாலும் எதிர்ப்பு நடவடிக்கைகளாலும் பதிலளிக்க கூடாது என அவர் தெரிவித்துள்ளார். குறித்த அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டபோர் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இதனையடுத்து, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டங்களும் கண்டன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சர்வதேச விசாரணைக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என நிபுணர்குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனினும், இந்த விசாரணைகள் இலங்கை அரசாங்கத்தின் ஊடாக நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டினை ஐ.நா. செயலாளர் நாயகம் வெளிப்படுத்தியுள்ளதாக பேராசிரியர் ரொஹான் குணரத்ன தெரிவித்துள்ளார்.



அரசாங்கம் புத்திசாதுர்யமாக செயற்பட்டு பேச்சவார்த்தை மூலம் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால், சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் என சிங்கப்பு,ரில் உள்ள அரசியல் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான சர்வதேச ஆய்வு நிலையத்தின் பேராசிரியர் மேலும் கூறியுள்ளார்.

## பால்மா வகைகள் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சகல பால்மாவின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூட் டுறவு மற்றும் உள்ளநாட்டு வர்த்தகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய அறிவித்தலுக்கு அமைய 400 கிராம் எடையுள்ள சகல பால் மாக்களும் 20 ரூபா வினாலும், 1 கிலோ எடையுள்ள பால் மாக்களின் விலை 49 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## அனர்த்தப்பாதிப்பு...

நாட்டின் சில மாவட்டங்களில் நிலவும் கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, உடனடியாக நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒசாமா என்ற...

அமைந்தது. அதன்பிறகு அமெரிக்காவை எச்சரிக்கும் பல்வேறு வீடியோக் காட்சிகள் ஒசாமாவால் ஊடகங்களினூடாக வெளியிடப்பட்டன.

ஒசாமாவைத் தேடும்பணியில் அமெரிக்கப்படைகளுடன் பிரித்தானியப் படைகளும் இணைந்துகொண்டன.

நேற்றையதினம் ஒசாமா அமெரிக்கப் படைகளால் கொல்லப் பட்டதாக அமெரிக்க அரசால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## தனியார்துறை...

அடிப்படையில், ஒரு ஊழியர் இறந்துவிட்டால் அவரது ஓய்வூதியம் அவரது மனைவிக்கு கிடைப்பதற்கான வழி எதுவும் கிடையாது என்று ஊழியர் சங்கத்தின் சட்டத்தரணிகள் குற்றஞ் சாட்டினார்கள்.

அந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதிகள், ஓய்வூதியம் ஊழியர்களது மனைவிக்கும் கிடைப்பதற்கு வழி செய்யும் வகையில், சட்டத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று அரசாங்கத்துக்கு பரிந்துரைத்துள்ளது. அத்துடன் இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு நாடாளுமன்ற சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மகிழ்ச்சிக்கடலில்...

அமெக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதி என்ற பெருமையைப் பெற்ற பராக் ஒபாமா, உலகின் நம்பிக்கை நட்சத்திரமாக அமெரிக்க மக்களால் பார்க்கப்பட்டார். அமெரிக்காவில் ஏற்பட்ட பெரும் வேலையில்லாப் பிரச்சினையும், பொருளாதார மந்த நிலையும் சமீப காலமாக அவருக்கு பெரும் சரிவை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், ஒசாமா பின் லாடன் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்ட சம்பவம் அவருக்கு அமெரிக்க மக்களிடையே மீண்டும் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கப் படையினரால் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட சம்பவம் குறித்த தகவலை நேற்றைய தினம் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பராக் வெளியிட்டுக் கொண்டிருந்த போது, வெள்ளை மாளிகைக்கு வெளியே பெருந்திரளான அமெரிக்க மக்கள் ஒன்றுகூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்துள்ளனர்.

அமெரிக்காவுக்கு பெரும் சவாலை ஏற்படுத்திய இஸ்லாமியத் தீவிரவாதத் தலைவர் கொல்லப்பட்டமை அமெரிக்க மக்களிடையே பெரும் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சாதிக்க முடியாததை பராக் ஒபாமா சாதித்தது அமெரிக்கர்களிடையே அவர் மீதான நம்பிக்கையை பல மடங்கு அதிகரித்துள்ளது. தீவிரவாதத்திற்கு எதிரான போரில் ஒபாமா பெரும் வெற்றி அடைந்திருப்பதாக அமெரிக்க மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிப்தித் தேர்தலில் மீண்டும் பராக் ஒபாமா போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளதுடன், அத்தேர்தலில் அவர் பெரும் வெற்றி பெறக் கூடிய வாய்ப்புகளும் அதிகரித்திருப்பதாக தெரிவித்துள்ளன.

# ஒசாமா சுட்டுக்கொலை...

ஒத்திகைமேற்கொள்ளப்பட்டு ஏற்கனவே தயார் நிலையில் அமெரிக்கப் படைத்தளம்ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இச்சிறப்புப் படையணி, தனது நடவடிக்கைக்காக நேற்று அதிகாலையில் சடுதியாக களம்இறங்கியது.. பாகிஸ்தானிய நகரமான இஸ்லாமாபாத்துக்கு மிகவும் சமீபமாகவுள்ள அகமதாபாத் என்ற நகரில் மிகமிக இரகசியமாக தங்கியிருந்தார் ஒசாமா. சகல ஆடம்பர வசதிகளையும்கொண்ட பிரமாண்டமான விடுதியொன்று. அந்த நகரின் ஒதுக்குப்புறமாக இயங்கி வந்தது. உயரமான பாதுகாப்புச் சுவர்களைக்கொண்ட இந்த விடுதியே ஒசாமாவின் வசிப்பிடமாக இருந்தமையை நேற்று அதிகாலை அமெரிக்க கொமாண்டோக்கள் தாக்குதலை நடாத்தும்வரை எவரும் சாதாரணமாக அறிந்திருக்கவில்லை. அமெரிக்க இராணுவத்தின் அதிநவீன லேசர் துப்பாக்கிகள் மற்றும் இரவுப்பார்வை தொலைநோக்கிக்கருவிகள் பொருத்தப்பட்ட துப்பாக்கிகள் உட்பட மேலும் பல கனரக ஆயுதங்களுடன் கொமேண்டோக்கள் தமது தாக்குதலைத் தொடுத்தனர். குறுகிய நேரம் நடைபெற்ற இத்தாக்குதலில் ஒசாமாபின்லேடனும், அவரது சகாக்களும் கொல்லப் பட்டுவிட்டனர்.

மோதலின் இறுதியில் ஒசாமாவின் சடலம் தலையில் சூட்டுக்காயங்களுடன் அமெரிக்கப் படைகளால் மீட்கப்பட்டது. இத்தாக்குதலின்போது அமெரிக்கப்படைகள் உலங்குவானூர்தி ஒன்றை இழந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கைப்பற்றப்பட்ட ஒசாமாவின் சடலத்தில் இருந்து இளைய மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவசர அவசரமாக டி. என்.ஏ. பரிசோதனை செய்யப்பட்டது. இச்சோதனையின் முடிவில் ஒசாமா கொல்லப்பட்டது உறுதி செய்யப் பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி பராக்ஒபாமா வெள்ளைமாளிகையில் இருந்து உத்தியோகபூர்வ அறிவித்தல் மூலம் ஒசாமா கொல்லப்பட்ட செய்தியை உலகுக்கு அறிவித்தார்.

### பாகிஸ்தானுக்கு சங்கடம்

பாகிஸ்தானின் அகமதாபாத் நகரில் அந்நாட்டின் முக்கிய இராணுவப் பயிற்சி மையத்துக்கு ஒரு கிலோமீட்டர் தொலைவில்தான் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட இடம் அமைந்துள்ளது என்பது அந்நாட்டின் அரசாங்கத்துக்கு மிகப் பெரிய இக்கட்டைத் தரும் என அவ்வூரில் உள்ள பி.பி.சி. செய்தியாளர் கூறுகிறார்.

தங்களுக்கு மிக அருகிலே ஒசாமா ஒளிந்திருந்தார் என்பதை அறிந்து அப்பகுதி மக்கள் அதிர்ச்சியில் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹில்லாரி கிளிண்டன், ஒசாமா பின்லேடன் மறைவோடு அல்கொய்தாவுக்கும், அது ஒருங்கிணைத்து நடத்துகிற பயங்கரவாதத்துக்கும் எதிரான யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக கூற முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

அல்கொய்தாவுக்கும் ஆப்கானிஸ்தானில் உள்ள அல்கொய்தாவின் கூட்டாளிகளுக்கும் எதிராக அமெரிக்கா தொடர்ந்து மோதவே செய்யும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### உலக பயங்கரவாதத்துக்கு பின்னடைவு

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டுள்ளதென்பது உலகெங்கிலும் உள்ள பயங்கரவாத அமைப்புகளுக்கு மிகப் பெரியதோர் பின்னடைவாகும் என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்துக்குதை எதிர்த்துப் போராடுவதிலும் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்பதிலும் சர்வதேச சமூகம் காட்டிவரும் மனோதிடத்தைக் காட்டுவதாக இந்தச் சம்பவம் அமைந்துள்ள தென்று பாகிஸ்தான் அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டுள்ளதை அவர் பிறந்த நாடான சவுதி அரேபியாவும் வரவேற்றுள்ளது. அல்கொய்தாவுக்கும் அவர்களது சித்தாந்தத்துக்கும் கிடைத்த பெரிய அடி இது என்று கூறி சவூதி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பாலஸ்தீன காஸாவில் நிர்வாகம் செய்துவரும் ஹமாஸ் அரசாங்கம், பின்லேடனின் கொலையைக் கண்டித்துள்ளது. பின் லேடனை ஒரு முஜாஹித் புனிதப் போராளி என்று அது வர்ணித்துள்ளது.

# இலங்கையும் இந்தியாவும்...

அறிக்கையில், ஒசாமா கொல்லப்பட்டது பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் எட்டப்பட்டிருக்கும் வெற்றியின் ஒரு மைல் கல் என்றும் வரவேற்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் விஷ்ணுபிரகாஸ் கூறும்போது, பாகிஸ்தான் பெயரைக் குறிப்பிடாமல், பயங்கரவாதக் குழுக்கள் அண்டை நாட்டில் அச்சமின்றி செயல்படும் நடவடிக்கைகளுக்கு முடிவுகட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதே நேரத்தில், இந்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் நேரடியாகவே பாகிஸ்தானைச் சாடியிருக்கிறார். ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானுக்குள் கொல்லப்பட்டிருப்பது, பல்வேறு குழுக்களைச் சேர்ந்த பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தானில் அடைக்கலம் கொடுக்கப்படுகிறது என்ற இந்தியாவின் கவலையை மீண்டும் கோடிட்டுக் காட்டியிருக்கிறது என்று அறிக்கை ஒன்றில் சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடையவர்களுக்கு பாகிஸ்தானில் தொடர்ந்து புகலிடம் கொடுக்கப்படுவதாகப் புகார் கூறியுள்ள சிதம்பரம், அவர்களைப் பற்றிய விவரங்கள் பாகிஸ்தான் அரசிடம் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

பின்லேடன் கொல்லப்பட்டமை குறித்து இலங்கை வெளியுறவுத்துறை துணை அமைச்சர் நியோமல் பெரேரா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

பின்லேடனை கொல்வதற்கான நடவடிக்கையின் போது சிறு பிள்ளையும் கொலை செய்யப்பட நேர்ந்தமை குறித்து, தாம் மனம் வருந்தினாலும், ஒரு பயங்கரவாத தலைவரான அவர் கொலை செய்யப்பட்டமை குறித்து தாம் மகிழ்வதாகவும், இதேபோன்ற மகிழ்ச்சியை இரு வருடங்களுக்கு முன்னதாக புலிகள் அமைப்பின் தலைவர் கொல்லப்பட்ட போதும் தாம் அடைந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.